வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු




Email : news@eelanadu.lk மலர் : 03 13.12.2021 திங்கட்கிழமை இதழ் : 08 பக்கங்கள் : 16

## தொற்றுக்கு 19 பேர் பலி!

கொழும்பு, டிசெ. 13

கொரோனா தொற்றால் நாட்டில் நேற்று முன்தினம் 19 பேர் உயிரிழந்தனர் என்று அரசாங்க தகவல் திணைக்களம் நேற்று அறிவித்தது.

இவ்வாறு உயிரிழந்தவர்களில் 30 -59 வயதுக்கு இடைப்பட்ட 2 ஆண்களும், ஒரு பெண்ணுமாக மூவரும், 60

15

## கிளிநொச்சியில் கொரோனாவுக்கு ஒருவர் பலி!

யாழ்ப்பாணம், டிசெ.13

கிளிநொச்சியில் உயிரிழந்த முதியவர் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ். போதனா மருத்துவமனை ஆய்வுகூடத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட்ட பி. சி. ஆர். சோதனையிலேயே இந்த விடயம் வெளியானது.

உயிரிழந்தவர் வீரபத்திரர் பரமேஸ்வரன் (வயது 75) என்று மருத்துவ அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)



### தமிழ் பேசும் கட்சிகள் 21ஆம் திகதி

# கூட்டு தீர்மானத்தில் கைச்சாத்திட முடிவு!

### நேற்றைய கொழும்பு சந்திப்பில் முடிவு

கொழும்பு, டிசெம்பர் 13

தமிழ் பேசும் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் எதிர்வரும் 21ஆம் திகதி மீண்டும் கொழும்பில் சந்தித்துப் பேசி கூட்டு தீர்மானம் ஒன்றில் கைச்சாத்திடத் தீர்மானித்துள்ளன.

கொழும்பில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற தமிழ் பேசும் கட்சிகளின் கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

15

## தமிழ்நாடு முதல்வரை சந்திக்க தமிழ் கட்சிகள் தயாராகின்றன!



கொழும்பு, டிசெ. 13

தமிழக முதலமைச்சர் மு. க. ஸ்டாலினை நேரில் சந்தித்துப் பேசுவதற்கு தமிழ்த் தேசியக் கட்சிகளின் பிரதிநிதிகள் குழுவொன்று தயாராகி வருகின்றது. இதற்கான பூர்வாங்க பேச்சுகள் நிறைவடைந்த நிலையில் விரைவில் குறித்த குழுவினர் விரைவில் தமிழகம் செல்லவுள்ளனர் என்று அறிய வருகின்றது.

தமிழ் மக்களுக்கு நியாயமான அதிகாரங்களை பகிர்ந்து இனப்பிரச்னைக்கான நிரந்தர

15

## வெடிபொருள் வெடித்து சிறுவன் உயிரிழப்பு!

திருமலை, டிசெ. 13

திருகோணமலை - மூதூர் - இக்பால் நகரப் பகுதியில் வெடிபொருள் வெடித்ததில் சிறுவன் ஒருவன் உயிரிழந்தான் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று பிற்பகல் 3.50 மணியளவில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இக்பால் நகரை சேர்ந்த ஹாபீஸ் நளீப் என்ற

15

## இலங்கைக்கு இந்தியா பொருளாதார பொதி!

புதுடில்லி, டிசெ. 13

பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள இலங்கைக்கு உதவ உடனடி பொருளாதார பொதி திட்டம் ஒன்றை இந்தியா உருவாக்கி வருகின்றது. இந்த உதவிகள், உணவு மற்றும் சுகாதாரம், பாதுகாப்பு, எரிசக்தி மற்றும் நாணய பரிமாற்றம் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

15

## தமிழ், முஸ்லிம், மலையக மக்களின் ஒருமித்த கோரிக்கை 13ஆம் திருத்தமே

### கூட்டமைப்பு தலைவர் சம்பந்தன்

கொழும்பு, டிசெ. 13

13ஆவது திருத்தம் முழுமையாக அமுல்படுத்தப்பட வேண்டும். இதுவே தமிழ் மக்கள், முஸ்லிம் மக்கள், மலையக மக்களால் முன்வைக்கப்பட வேண்டிய தேவையாகவும் அவர்களின் ஒருமித்த கோரிக்கையாகவும் உள்ளது என்று கூறியுள்ளார் தமிழ்த் தேசியக்

15

## 13ஆம் திருத்தமே எங்களுக்கு தற்போதுள்ள ஒரே பாதுகாப்பு

### விக்னேஸ்வரன் எம். பி.

கொழும்பு, டிசெ. 13

"தமிழ் பேசும் மக்களுக்கு தற்போது இருக்கும் ஒரேயொரு பாதுகாப்பு 13ஆம் திருத்தச் சட்டம்தான். இதை எடுத்துவிட்டால் எங்களுக்கு எந்தப் பாதுகாப்பும் இல்லாது போய்விடும்", இவ்வாறு கூறியுள்ளார் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி. வி. விக்னேஸ்வரன்.

15



## அரசாங்கமும் வெடிக்கும் அபாயம்

கண்டி, டிசெ. 13

அண்மையில் இடம்பெற்ற எரிவாயு மற்றும் திரவ உர வெடிப்புகளை போன்று அரசாங்கமும் வெடிக்கும் அபாயம் உள்ளது என்று இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

கண்டி - பொல்கொல்லையில்

15

## முடிந்தால் 13ஆம் திருத்தத்தை அமுல்படுத்திக் காட்டுங்கள்

### மனோ கணேசன் அரசாங்கத்துக்கு சவால்

கொழும்பு, டிசெ. 13

முடிந்தால் 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்திக் காட்டுங்கள் என தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் அரசாங்கத்திற்கு பகிரங்கமாக சவால் விடுத்துள்ளார்.

தமிழ் பேசும் கட்சிகளின் இரண்டாம் கட்ட சந்திப்பு நேற்று கொழும்பில் இடம்பெற்றிருந்தது. அதன் பின்னர் கருத்து வெளியிடும் போதே தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ

15

## வீட்டுத் திட்ட பயனாளிகள் 2,162 பேரின் பட்டியல் பூர்த்தி!

யாழ்ப்பாணம், டிசெ. 13,

"அரசாங்கத்தின் தூரநோக்கு கொள்கைக்கிணங்க, கட்சி பேதமற்ற மக்கள் சேவை தொடரும் என்பதை நாம் உறுதிபடக் கூறிக்கொள்கிறோம். யாழ்ப்பாண மாவட்டத்தில், இதுவரை 2,162 வீட்டுத் திட்டங்களுக்கான பெயர் பட்டியல் முழுமையடைந்து, நூற்றுக்கு நூறு சதவீதம் தகுதியுடைய பயனாளிகளிடம் கையளிக் கப்பட்டுள்ளன. இவ்விடத்தில் எவ்வித

15




**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## வெடிபொருள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

15 வயதான சிறுவனே உயிரிழந்தார். சிறுவனின் சடலம் தோப்பூர் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

நீதிவான் விசாரணைகளின் பின்னர், பிரேத பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது. சம்பவம் தொடர்பில் மூதூர் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

## தமிழ்நாடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல் தீர்வைப் பெற் றுத்தருவதற்காக தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஊடாக பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசாங்கத்துக்கு தொடர்ச்சியான அழுத்தங்களை வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை மேற்படி குழுவினர் முன்வைக்கும் முகமாகவே இந்தச் சந்திப்பு இடம்பெறவுள் ளது.

அத்துடன், தமிழகம் செல்லும் தமிழ்த் தேசியக் கட்சிகளின் பிரதிநிதிகள் குழு மாநிலத்தை ஆளும் கட்சியான திராவிட முன்னேற்றக்கழகத்தின் பங்காளிக்கட்சிகளின் தலைவர்களான தொல். திருமாவளவன், வை. கோபாலசாமி உள்ளிட்டவர்களையும் தமிழர் விவகாரங்களுடன் தொடர்புடைய அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் உணர்வாளர்களையும் சந்திப்பதற்கு திட்டமிட்டுள்ளது.

மேலும், இந்தப் பயணம், தமிழக அரசியல் தலைமைகளுக்கும் வடக்கு, கிழக்கு உள்ளிட்ட இலங்கை தமிழ் தேசிய அரசியல் கட்சிகளின் பிரதிநிதிநிதிகளுக்கும் இடையில் இரு தரப்பு உறவுகளை புதுப்பித்துக்கொள்ள வழிசமைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

தற்போதைய நிலையில், இந்தப் பயணத்தில் பங்கெடுப்பவர்கள் பற்றிய தகவல்கள் எவையும் வெளிப்படுத்தப்படாத போதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகிய பிரதான அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் பங்கேற்கவுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதிநிதிகள், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதிநிதிகள், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் பிரதிநிதிகள் ஆகியோரும் பங்கேற்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இதேவேளை, இந்த நகர்வில் வகிபங்காற்றும் புலம்பெயர் அமைப்புக்களின் பிரதிநிதிகளும் இந்த சந்திப்புக்களில் பங்கேற்கக்கூடும் என்று விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ)

## அரசாங்கமும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த இராஜாங்க அமைச்சர் தொடர்ந்து கூறுகையில்,

"நாட்டின் நிர்வாகத்தை மாற்றுவதற்கான வாய்ப்பு பொதுமக்களுக்கு இருக்கிறது. எவ்வாறாயினும், அரசாங்கமோ அல்லது அரச தலைவரோ எத்தனை முறை மாறினாலும், அதே அரசியல் வாதிகளும் அதிகாரிகளும் புதிய அரசாங்கத்தின் அங்கமாக இருப்பதால் எந்தப் பயனும் இல்லை.

தான் சொல்வதைச் செய்யும், செய்வதை சொல்லும் தலைவரே நாட்டுக்குத் தேவை. பாராளுமன்றத்தில் வாதிடுவதன் மூலம் பிரச்னைகளுக்கு தீர்வு கிடைக்காது. அது மேலும் பல பிரச்னைகளை உருவாக்கும், என்றார்.

மேலும், ஜனாதிபதியைச் சுற்றி நல்ல நபர்கள் இருக்கிறார்கள். எவ்வாறாயினும், அரச தலைவர் இந்த நபர்களின் கருத்துக்களைப் பெறுகிறாரா என்பது கவலைக்குரியது. பொது மக்களும் இதே கவலையை எழுப்புகிறார்கள், இருப்பினும் பொதுமக்கள் தொடர்ந்து பொறுத்துக்கொள்ளமாட்டார்கள் - என்றார்.(ஐ)

## தொற்றுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வயதுக்கு மேற்பட்ட 11 ஆண்களும், 5 பெண்களுமாக 16 பேரும் என 19 பேர் உயிரிழந்தனர்

இந்த இறப்புகளுடன் நாட்டில் தொற்றால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை14 ஆயிரத்து 614ஆக உயர்ந்துள்ளது. (ஐ)

## இலங்கைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்திய அதிகாரிகளை மேற்கோள் காட்டி "எக்கனமிக் ரைம்ஸ்" பத்திரிகையே இந்த விடயத்தை கடந்த சனிக்கிழமை பதிப்பில் வெளியிட்டுள்ளது.

நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷவின் இந்தியப் பயணத்தைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

உணவு, மருந்து, எரிபொருள் மற்றும் பிற அத்தியாவசியப் பொருட்களை இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்வதற்கு இலங்கைக்கு கடன் வழங்குவதும் இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

எல்லைகளை திறப்பதன் மூலம் கோவிட் தொற்று நோயால் பாதிக்கப்பட்ட சுற்றுலா துறையை புதுப்பிக்க இலங்கை முயற்சிக்கிறது. மேலும், அதிகமான இலங்கையர்கள் வேலை தேடுவதற்காக வெளிநாடுகளுக்கு செல்வதால் பண வரவும் அதிகரிக்கும் என்று கூறப்படுகின்றது.

இந்தியாவின் உடனடி பொருளாதார தீர்வு பொதி இரு நாடுகளுக்கும் இடையிலான இரு தரப்பு உறவுகளை மேலும் ஆழப்படுத்தும் என இரு நாடுகளும் அடையாளம் காண்கின்றன என்று இலங்கை அரசின் அறிக்கையை மேற்கோள்காட்டி எக்கனமிக் ரைம்ஸ் கூறியுள்ளது. (ஐ)

## தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன்.

அத்துடன், "13ஆம் திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்குப் பதிலாக அதிலிருந்து சில அதிகாரங்களை நீக்குவதற்கே இன்றைய ஆட்சியாளர்கள் முயற்சிக்கிறார்கள்", என்றும் சாடினார்.

கொழும்பு சந்திப்பின் பின்னர் கருத்துத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

புதிய அரசியல் சாசனம் விரைவில் வெளிவரலாம் என்ற கருத்து நிலவுகின்றது. எங்களுக்கு உண்மை என்னவென்று தெரியாது. இவ்விதமான சூழலில், ஒரே நாடு ஒரே சட்டம் என்ற கருத்தும் நிலவுகின்றது. தமிழ் மக்களின் காணிகள் அபகரிக்கப்படுதல், திட்டமிட்ட குடியேற்றங்கள் நிகழ்த்தப்படுதல் என இவ்விதமான நிலைமைகள் தொடர்கின்றன.

அரசாங்கத்தின் நோக்கம் என்ன? அவர்கள் என்ன செய்வார்கள் என்பது எவராலும் சொல்லமுடியாது. ஆனால் அவர்களின் போக்கு இறுகிவரும் கடும் போக்காக மாறும் என்று சந்தேகிப்பதற்கு போதுமானளவு இடம் உண்டு. என்னவிதமான நிலைப்பாட்டை நாங்கள் எடுக்க வேண்டும்? பின்பற்றவேண்டும்? என்னவிதமான கோரிக்கையை விட வேண்டும் என்று ஆலோசித்து விரைவில் அறிவிப்போம்.

13ஆவது திருத்தச் சட்டம் இன்று வரை முழுமையாக நிறைவேற்றப்படவில்லை. அதை நிறைவேற்றுவதற்கு பதிலாக சில அதிகாரங்களை அதிலிருந்து நீக்குவதற்குமான சூழல் நிலவுகின்றது. இவ்விதமான சூழலில் 13ஆவது திருத்தம் முழுமையாக அமுல்படுத்தப்பட வேண்டும் என்று இங்கு கூடியிருக்கிறார்கள். ஒற்றுமையான - ஒருமித்த கோரிக்கை தமிழ் மக்கள், முஸ்லிம் மக்கள், மலையக மக்கள் முன்வைக்கப்பட வேண்டிய தேவை இருக்கிறது. எல்லோரும் எங்களுடைய கருத்துக்களை கூறினோம். எந்தவிதமான வேற்றுமையான கருத்துக்களும் இல்லை - என்றார். (ஐ)

## வீட்டுத் திட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சலுகைகளோ, அரசியல் அழுத்தங்களோ பிரயோகிக்கப்பட நாம் இடமளிக்கவில்லை. இனியும் இடமளிக்கமாட்டோம்."

இவ்வாறு தெரிவித்துள்ளார் பிரதமரின் இணைப்புச் செயலாளரும், வடக்கு, கிழக்குக்கான விசேட மீள்குடியேற்ற ஒருங்கிணைப்பாளருமான கீதநாத் காசிலிங்கம். இது தொடர்பில் அவர் தெரிவித்தவை வருமாறு,

கடந்த ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தின்போது, சிறீலங்கா பொதுஜன பெரமுன வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷவினால் மக்களின் முன் வைக்கப்பட்ட 'நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு' கொள்கைப் பிரகடனத்துக்கு இணங்க, மக்கள் நலன்சார்ந்த திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மக்களுக்கான இத்திட்டங்களில் எந்தவித கட்சி பேதங்களோ, பிரதேசவாதங்களோ பார்க்கப்படவில்லை. இத்தகைய நிலையில்தான், வடமாகாணத்தின் யாழ். மாவட்டத்துக்காக அரசாங்கத்தின் வீட்டுத் திட்டங்களை நிறைவேற்றும் பணி முன்னிலைப் படுத்தப்பட்டது.

ஜனாதிபதி மற்றும் பிரதமரின் ஆலோசனைக்கமைய, யாழ். மாவட்டத்துக்கான வீட்டுத்திட்டங்களை எந்தவித அரசியல் பாகுபாடுமின்றி முற்றுமுழுதாக நிறைவேற்றிக்கொடுக்கும் வாய்ப்பு எனக்கு வழங்கப்பட்டது. அந்தவாய்ப்பைக் சரியாகப் பயன்படுத்தி, மக்கள் நலன்சார்ந்த வீட்டுத்திட்டங்களை முற்றுமுழுதாக மக்களுக்கு வழங்கக்கூடியதாக இருந்திருக்கிறது. இச்செயற்றிட்டத்தை முழுமைப்படுத்துவதற்கு உறுதுணையாய் இருந்த அரசாங்க உத்தியோகத்தர்கள், மக்கள் பிரதிநிதிகள், ஊடக நண்பர்கள் அனைவருக்கும் இத்தருணத்தில் நன்றிசொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன் - என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## கூட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) ஒழுங்கமைப்பில் தமிழ் பேசும் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள், முதன்முறையாக நவம்பர் 2ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் ஒன்று கூடியிருந்தனர். இதன் தொடர்ச்சியாக இரண்டாம் கட்டச் சந்திப்பை கொழும்பில் நேற்று நடத்தியது. இந்தக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனும் கலந்து கொண்டிருந்தார்.

தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகள் முழுமையாக நிறைவேறும் வரை - சமஷ்டி அடிப்படையிலான அதிகார பரவலாக்கல் அமுலாகும்வரை- அதன் முதல்படியாக, ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட வலுவான உடன்படிக்கையான இந்திய - இலங்கை உடன்படிக்கையில் வாக்களித்ததன்படி, 13, 16ஆவது திருத்தங்களை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும், அடுத்த படிமுறையாக சமஷ்டி அடிப்படையிலான நிரந்தர அரசியல் தீர்வு முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டுமென இந்தியா உள்ளிட்ட சர்வதேச சமூகத்தை கோருவதே இந்த கூட்டு முயற்சியின் நோக்கம் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தநிலையில், எதிர்வரும் 21ஆம் திகதி கூட்டறிக்கை வெளியிடப்படவுள்ளது. இதில், தமிழ் பேசும் கட்சிகளின் தலைவர்கள் கைச்சாத்திடுவார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டது.

விசேடமாக, அனைத்து தமிழ் தரப்பும் ஒன்றுபட்டு இந்திய பிரதமர் நரேந்திர மோடியிடம் இந்த கோரிக்கையை முன்வைப்பதென்றும், இதற்காக தமிழக முதல்வர் மற்றும் இந்திய பிரதமரை சந்திப்பதென்றும் திட்டமிட்டு, இந்த கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

பம்பலப்பிட்டி, குளோபல் டவர் ஹோட்டலில் நடந்த நேற்றைய கலந்துரையாடலில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம், தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் சி. வி. விக்னேஸ்வரன், ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம், புளொட்டை பிரதிநிதித்துவப்படுத்தி ஆர். இராகவன், ஈ.பி.ஆர்.எல்.எவ். பிரதிநிதித்துவப்படுத்தி க.சர்வேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பங்கேற்கவில்லை. இதேநேரம், ரிஷாத் பதியூதீனின் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சிக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை என்றும் தெரிய வருகின்றது.

## முடிந்தால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கணேசன் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்.

"எதிர்வரும் 21ஆம் திகதி முக்கிய ஆவணம் ஒன்றை வெளியிடவுள்ளதாகவும் அவர் இதன்போது தெரிவித்திருந்தார். 13ஆவது திருத்தம் அரசமைப்பில் உள்ளது. இல்லாத ஒன்றை நாம் கேட்கவில்லை.

இலங்கை - இந்திய உடன்படிக்கை மூலமாகவே இந்த திருத்தம் அரசமைப்புக்குகு கொண்டுவரப்பட்டது. அதனால், அதனை நடைமுறைப்படுத்துவதற்கான அழுத்தங்களைக் கொடுப்பதற்கான கடப்பாடு இந்தியாவுக்கும் உள்ளது.

அதேபோல சர்வதேசத்துக்கும் இவ்விடயத்தில் கடப்பாடு உள்ளது. போர் இடம்பெற்ற போது உலக நாடுகள் இலங்கைக்கு உதவின. போர் முடிந்தால், அரசியல் தீர்வு வழங்கப்படும் என அவை எதிர்பார்த்தன. இன்று போர் முடிவடைந்து 12 வருடங்கள் சென்று விட்டன. இன்றுவரை தீர்வு இல்லை.

அதனால்தான் இலங்கை அரசுக்கு மட்டுமல்ல, இந்தியாவையும் சர்வதேசத்தையும் கோருகிறோம் 13 ஐ நடைமுறைப்படுத்துங்கள்' என மனோ கணேசன் மேலும் தெரிவித்தார்.

## 13ஆம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் பேசும் மக்களை பிரதி நிதித்துவம் செய்யும் கட்சிகள் கொழும்பில் நேற்று நடத்திய சந்திப்பின் பின்னர் செய்தியாளர்களிடம் பேசியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "தற்போது சட்டப்புத்தகத்தில் இருக்கும் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துமாறே நாம் கோருகின்றோம். அது எங்களின் நிரந்தரமான அரசியல் தீர்வுக்கு பதிலான ஒன்றல்ல. சமஷ்டி ரீதியான நிரந்தரத் தீர்வு ஒன்றே எமக்கு தேவையாகவுள்ளது. அந்த நிரந்தரத் தீர்வு எடுக்கும் வரையில் நாங்கள் தற்போது இருக்கும் சட்டத்தை நடைமுறைப்படுத்த கோரக் காரணம் என்னவென்றால் அது இல்லாமல் போய்விட்டால், இங்கு அதற்காகப் பாடுபடும் மக்களே இல்லாது போய்விடுவர்.

"எங்கள் காணிகள் பறிபோகின்றன. வாழ்வாதாரங்கள் பறிபோகின்றன. இந்தநிலையிலே நாங்கள் தற்போது இருக்கும் சட்டங்களை நடைமுறைப்படுத்தி அவற்றை பாதுகாக்க வேண்டிய அவசியம் எங்களுக்கு இருக்கின்றது. அது 13ஆம் திருத்தச் சட்டத்திலிருந்துதான் வருகின்றது. அதை எடுத்துவிட்டால் எங்களுக்கு எந்தவிதமான பாதுகாப்பும் இல்லாது போய்விடும். தற்போது இருக்கும் ஒரேயொரு பாதுகாப்பு 13ஆம் திருத்தச் சட்டம்தான். விரைவில் ஓர் ஆவணத்தை தயாரித்து அதை இந்தியாவுக்கு அனுப்ப நடவடிக்கை எடுத்துள்ளோம்" - என்றார். (ஐ)

# இப்படியும் நடக்கிறது…!

அண்மையில் பிரான்ஸிலிருந்து தாயகம் வந்தி ருந்த நண்பர் ஒருவர் நீண்ட நேரம் தனது புலம் பெயர் வாழ்க்கை குறித்து பல்வேறு விடயங்க ளையும் பேசிக்கொண்டிருந்தார்.

எப்படி பிரான்ஸ் போய்ச் சேர்ந்தார் என்பதிலி ருந்து ஒன்றும் விடாமல் சொல்லிக்கொண்டிருந்தார்.

அங்கு போய்ச் சேர்ந்த புதிதில் எப்படி பிரெஞ்சுப் பாஷையைத் தெரியாமல் சமாளித்தீர்கள் என்று கேட்டபோது ஒரு சுவாரஷ்யமான கதையைச் சொன்னார்.

ஒருநாள் இரவு வேளை. சரியான பசி. என்ன சாப் பிடுவது என்று யோசித்துக்கொண்டு, பூட்டுவதற்கு தயாராகிக்கொண்டிருந்த பலசரக்கு கடை ஒன்றில் போய், பிரெட் (Bread) இருக்கிறதா என்று ஆங்கிலத்தில் கேட்டாராம்.

கடைக்காரருக்கோ ஆங்கிலம் தெரியாது.

அவர் ஒன்றும் புரியாமல் விழிக்க, இவர் தனக்குத் தெரிந்த கைப்பாஷையில் சொல்லிப் பார்த்திருக் கிறார்.

கடைக்காரருக்கு எதுவும் புரியவில்லை.

இவர் வெறுப்புடன், "கோதாரி விழுந்தது, பசிக்கு ஒரு பாண் துண்டு சாப்பிடக்கூட முடியேல்லை" என்றிருக்கிறார்.

கடைக்காரர், அப்போது புரிந்தவராக, "ஓ.... பாண்.. பாண்…", என்றவர் கடைக்கு உள்ளே சென்று பாணை எடுத்துக்கொண்டு வந்து காட்டியி ருக்கிறார்.

இவருக்கு அப்போதுதான் தெரியும் நாம் பாண் என்பதுபோல அங்கும் பாண்தான் என்று.

பாண் என்பது போர்த்துக்கேய பாஷையாக இருக்கலாம். அதுவே பிரெஞ்சிலும் பாண் வகை களில் ஒன்றை பாண் என்கிறார்கள்.

நம்மில் சிலர் ஆங்கிலம் தெரிந்திருப்பதை மிகப் பெரிய தகுதியாக நினைக்கின்றனர். இன்னும், சிலர் பல மொழிகளை தெரிந்திருப்பது மிகப்பெரிய தகுதி என்று கருதுகின்றனர். பல மொழிகளை அறிந்தி ருப்பது நல்லதுதான். அது அவர் செய்கின்ற வேலை களைப் பொறுத்தது.

புலம்பெயர் தமிழர்கள் தமது பிள்ளைகள் தமிழ் பேசுவதை மிகப்பெரிய விசயமாக கொள்வதுண்டு. அந்தப் பிள்ளை சிங்களவர்கள் தமிழ்பேசுவதுபோல பேசுவதுகூட நமக்கு பெருமைக்குரிய விசயமாக இருக்கின்றது.

ரஷ்ய அதிபர் புடின், ரஷ்ய மொழியில் மாத்தி ரமே பேசுகிறார். அதிகம் ஏன் கொழும்பிலிருந்த சீனத் தூதுவர் மொழிபெயர்ப்பாளர்களை வைத் துத்தான் ஆங்கிலம் தெரிந்தவர்களுடன் பேசுகிறார். சீனாவைப் பொறுத்தவரை இலங்கை ஒரு முக்கிய நாடு. அதற்கு தனது தூதுவர் சரளமாக ஆங்கிலம் தெரிந்திருக்கவேண்டியது அவசியமல்ல என்று சீனா கருதியிருக்கிறது.

மேர்வின் சில்வாவுக்கும் மூன்று பாஷைகளும் தெரியும்தான். அதற்காக அவர் சிறந்த தலைவராக இருந்துவிட்டாரா என்ன?

அண்மையில் கூட்டமைப்பின் தலைவர்கள் இந்தியத் தூதுவரைச் சந்தித்தபோது, அந்தச் சந்திப்பில் கலந்துகொண்ட ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன், எதையோ தமிழில் சொல்வதற்கு ஆரம்பித்திருக்கிறார்.

உடனே அருகில் இருந்த சுமந்திரன், அவரை இடைமறித்துவிட்டு, இவர் என்ன சொல்ல வருகிறார் என்றால் என்று ஆங்கிலத்தில் தானே, செல்வம் சொல்ல நினைப்பதை இவர் சொல்ல முற்பட்டபோது, தூதுவர் அவரை மறித்துவிட்டு, தனக்கு பக்கத்தில் இருந்த தமிழ் தெரிந்த ஓர் அலுவலரை செல்வம் சொல்வதை தனக்கு மொழி பெயர்க்குமாறு கேட்டிருக்கிறார்.

தூதுவரைப் பொறுத்தவரை செல்வம் சொல்வது என்ன என்பதை அறியவேண்டும்.

ஆக, ஒரு தலைவருக்கு சொல்ல வருகின்ற கருத் துத்தான் அவர் தலைவர் என்பதை தீர்மானிக்க உத வுமே தவிர, அவர் சொல்கின்ற மொழி அல்ல.

- ஊர்க்குருவி

# வாகன இலக்க தகடுகள் பெறுவோர் கவனத்துக்கு

யாழ்ப்பாணம், டிசெ. 13

மோட்டார் வாகன போக்கு வரத்து திணைக்களத்தின் தலைமை அலுவலகத்திலிருந்து யாழ். மாவட்ட அலுவலகத்துக்கு வாகன இலக்கத் தகடுகள் அனுப்பி வைக் கப்பட்டுள்ளன.

இவை, மாவட்டத்தின் அனைத்து பிரதேச செயலகங்கள், மாவட்ட செயலகத்தின் மோட்டார் போக்கு வரத்து திணைக்கள என்பவற்றில் மக்கள் பார்வைக்காக காட்சிப்படுத் தப்பட்டுள்ளன.

கோவிட் -19 தொற்று காரணமாக https://dmtappointments. dmt.gov.lk/ என்ற இணையத்தளம் ஊடாக அல்லது 021 211 7116 என்ற தன்னியக்க தொலைபேசி இலக்கம் மூலம் முற்பதிவு செய்து தங்கள் கைபேசி இலக்கத்துக்கு மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தால் அனுப்பப்பட்ட குறுந்தகவலுடன் உரிய ஆவணங்களுடன் வந்து இலக் கத் தகடுகளை பெற்றுக்கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள் ளது. (ஐ)

# கஞ்சா சுருட்டுடன் இளைஞர் கைது!

யாழ்ப்பாணம், டிசெ. 13

யாழ்ப்பாணம் நகரில் கஞ்சா சுருட் டுடன் இளைஞர் ஒருவர் விசேட அதிரடிப் படையினரால் கைதுசெய் யப்பட்டுள்ளார்.

விசேட அதிரடிப் படையினருக் குக் கிடைத்த இரகசியத் தகவலைய டுத்து யாழ். நகரில் குறித்த இளைஞர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட இளைஞர் சுன்னாகம் பகுதியைச் சேர்ந்தவர் என்று கூறப்படுகின்றது. (இ - 03)

# டெங்கு ஒழிப்புக்காக பேசாலையில் மக்கள் சிரமதானம்!



மன்னார், டிசெ. 13

மன்னார் மாவட்டத்தில், அண் மைக்காலமாக பெய்து வந்த கடும் மழை அதனைத் தொடர்ந்து ஏற் பட்ட வெள்ளம் காரணமாக, மன் னார் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பல கிராமங்களில் டெங்கு நோய் தாக்கம் அதிகரித்து காணப்ப டுகின்ற நிலையில், நேற்று ஞாயிற் றுக்கிழமை காலை, பேசாலை பகுதி யில் சிரமதானம் முன்னெடுக்கப் பட்டது.

பேசாலையில் நேற்றுமுன்தினம் வரை 90இற்கும் மேற் பட்ட டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டு, மன்னார் பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். இந்த நிலையி லேயே, பேசாலை கிராம மக்கள், நேற்று தமது கிராமங்களில் சிரமதா னப் பணியை முன்னெடுத்தனர்.

கிராம மக்களுடன் கடற்படை, இராணுவத்தினர், கிராம அலுவலர் கள், சுகாதார தரப்பினர், மதத் தலை வர்கள் மற்றும் பல்வேறு அமைப்பி னர் இணைந்து கொண்டமை குறிப் பிடத்தக்கது. (ஐ)

## கல்வி tv CHANNEL-1

13.12.2021
திங்கட்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

## கல்வி tv CHANNEL - 2

13.12.2021
திங்கட்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu
13.12.2021 திங்கட்கிழமை
பிலவ வருடம், கார்த்திகை 27

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

editor@eelanadu.lk, eelanaduweekly@gmail.com, news@eelanadu.lk
021 730 1370

## தமிழ் கட்சிகளின் கொழும்பு சந்திப்பு?

யாழ்ப்பாண சந்திப்பின் தொடர்ச்சியாக, தமிழ் கட்சிகள் கொழும்பில் சந்தித்திருக்கின்றன. இந்த சந்திப்பில் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் பங்குகொண்டிருக்கின்றார். சம்பந்தனை இணைத்துக் கொள்வதுதான் இந்த சந்திப்பின் பிரதான நோக்கமாகவும் இருந்தது. ஆனாலும் இந்த சந்திப்பிலும் இறுதி முடிவு எட்டப்படவில்லை. எதிர்பார்த்தது போன்றே - சம்பந்தன் தமிழ் அரசு கட்சியுடன் கலந்துரையாடிய பின்னர்தான் கருமங்களை ஆற்றமுடியுமென்று கூறியிருக்கின்றார். ஆனால், சம்பந்தன் அவ்வாறு முடிவெடுக்கும் ஜனநாயக குணமுள்ள ஓர் அரசியல்வாதியல்ல என்பதும், இரகசியமான ஒன்றல்ல. இந்த அடிப்படையில் மேலும் சில நாட்களுக்கு பின்னர்தான் இறுதி முடிவு எடுக்கப்படவுள்ளது. இதற்கிடைப்பட்ட நாட்களில் கட்சிகளின் தலைவர்கள் தங்கள் பரிந்துரைகள் - முன்மொழிவுகளை முன்வைக்கவுள்ளனர். சம்பந்தன் இந்த சந்திப்பில் கலந்துகொண்டிருக்கும் அதேவேளை, யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற தமிழ் அரசு கட்சியின் கூட்டமொன்றில் பேசியிருக்கும் எம். ஏ. சுமந்திரன், பங்காளிக் கட்சிகளின் தலைவர்களின் இந்த முயற்சிகளை ஏளனமாக விமர்சித்திருக்கின்றார்.

அனைத்துப் பிரதான தமிழ் கட்சிகளும் ஓரணியாக இந்தியாவிடம் கோரிக்கையொன்றை முன்வைப்பதுதான் இந்த முயற்சியின் இறுதி இலக்கு. இந்தியாவிடம் ஓரணியாக கோரிக்கையொன்றை முன்வைப்பதை எதிர்க்கும் நோக்கிலேயே யாழ்ப்பாண சந்திப்பை தமிழ் அரசு கட்சி நிராகரித்திருந்தது. இந்தியாவிடம் ஒரு கோரிக்கையை முன்வைப்பதாயின், இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் விளைவான, 13ஆவது திருத்தச்சட்டத்தின் அடிப்படையில்தான் கோரிக்கை முன்வைக்க முடியும். ஏனெனில், அதனைத்தான் இந்தியா தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றது. அதனைத் தாண்டி செல்ல வேண்டுமென்பது தமிழத் தரப்பின் இலக்காக இருந்தாலும், அதனை அடைவதற்கான வழியை எவராலும் முன்வைக்க முடியவில்லை.

இந்தப் பின்னணியில்தான் இந்த கூட்டத்தின் அடிப்படையில் ஓர் அரசியல் நகர்வும் - இதற்கு மாறாக, சுமந்திரனின் அமெரிக்க பயணத்தின் அடிப்படையில் தனியானதோர் ஓட்டமும் இடம்பெற்று வருகின்றது. சுமந்திரனின் ஆட்டம், தமிழ் அரசு கட்சியின் ஆட்டம் போன்று தெரிந்தாலும்கூட, மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியனை தவிர வேறு எந்தவொரு தமிழ் அரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களும் சுமந்திரனுடன் இணைந்திருப்பதாகத் தெரியவில்லை. வெளிநாட்டு பயணத்தில் சாணக்கியனை மட்டும் இணைத்தது போன்றே உள்ளூரிலும் சாணக்கியன் மட்டுமே சுமந்திரனுடன் நிற்கின்றார். இந்தப் பின்னணியில்தான் சாணக்கியர்களின் கருத்துப்பகிர்வு என்னும் அடிப்படையில் கூட்டமொன்று வடக்கில் இடம்பெற்றிருக்கின்றது. சுமந்திரன் இதன்போதே, ரெலோ, டி .பி. எப். எல் (புளொட்) மற்றும் அவர்களின் முயற்சிக்கு ஆதரவளித்திருக்கும் விக்னேஸ்வரன், ஹக்கீம், மனோ கணேசன் ஆகியோரை - அந்தக் கட்சியின், இந்தக் கட்சியின் தலைவர்களென்று விமர்சித்திருக்கின்றார்.

இந்தியாவிடம் செல்லும் முயற்சியை எதிர்ப்பதற்காக, இப்போது - அமெரிக்கா ஒரு புதிய துருப்புச் சீட்டாக பயன்படுத்தப்படுகின்றது. 2022இற்குள் சில விடயங்கள் சாதகமாக இடம்பெற்றலாமென்று நம்புகின்றோம் என்னும் புதிய கதையொன்றுடன் சுமந்திரனின் ஆட்டம் அரங்கேறியிருக்கின்றது. கடந்த ஆட்சிக் காலத்தில், புதிய அரசியல் யாப்பு என்னும் துருப்புச் சீட்டின் மூலம் ஆடப்பட்ட மேற்படி ஆட்டம், இப்போது அமெரிக்காவின் பெயரால் ஆடப்படுகின்றது.

அமெரிக்கா, மோடி அரசாங்கத்தின்மீது அழுத்தங்களை பிரயோகித்து, இந்தியாவின் 13ஆவது திருத்தச் சட்ட நிலைப்பாட்டை மாற்றியமைக்கும் என்பது போன்றதொரு நம்பிக்கை சாமானிய மக்கள்மீது தூவப்படுகின்றது. ஆனால், கூட்டமைப்பிற்குள் மிகவும் தெளிவாக 13ஐப் பாதுகாக்க வேண்டும் என்னும் அணியும் - 13ஐ வலியுறுத்தத் தேவையில்லை என்னும் அணியும் உருவாகிவிட்டது. ஆனால், பங்காளிக் கட்சிகளின் தலைவர்களால் முன்னெடுக்கப்பட்ட முயற்சியில் சமஷ்டித் தீர்வே இறுதியானது என்பதும் தெளிவாகவே சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றது. பின்னர் எதற்காக சுமந்திரன் அதனை எதிர்க்க வேண்டும்? ராஜபக்ஷ அணியினர், இந்தியாவின் தலையீடான 13ஆவது திருத்தச்சட்டத்தை அடையாளம் தெரியாதவகையில் இல்லாதொழிக்க வேண்டுமென்னும் முனைப்போடு முயற்சிக்கின்றபோது, அதனை இந்தியாவிடம் வலியுறுத்தக்கூடாதென்று சுமந்திரன் அணி கூறுவதன் பின்னணி என்ன?

# கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்துவின் காலமறிந்த கண்ணோட்டம் !

-அலசுவது இராஜதந்திரி-

இலங்கையின் இன்றைய அரசியல் மற்றும் பொருளாதார நிலவரத்தை நாடி பிடித்தறிந்து தமது கருத்துக் கண்ணோட்டத்தை இலங்கையின் முன்னணி அரசியல் விமர்சகர்களில் ஒருவரான கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து வெளியிட்டுள்ளார்.

ஆட்டம் கண்டுள்ள அரச நிர்வாகம் மற்றும் சீரற்ற நிலையிலுள்ள பொருளாதாரம் என்பவை காரணமாக நாட்டு மக்கள் ஆட்சியாளருக்கு எதிராக வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டங்களை நடத்த முன்வரும் சூழ்நிலைகள் அதிகரித்து வருகின்றன என்றும் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து தெரிவித்துள்ளார்.

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு கொழும்பு தாஜ்சமுத்ரா ஹோட்டலில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் நேற்று முன்தினம் உரை நிகழ்த்திய போதே கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து இன்றைய ஆட்சியாளரின் பலவீனமான நிலையை சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசாங்கத்தில் அங்கம் வகிப்போரே இன்றைய ஆட்சியாளர்கள் குறித்து தமது அதிருப்தியை ஏற்கனவே வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை முன்னாள் இராணுவத் தளபதியாக ஜெனரல் தயா ரத்நாயக்க நேற்று முன்தினம் இன்றைய அரசாங்கம் பற்றி கருத்து வெளியிட்டபோது இராணுவப் பின்னணி கொண்டோரினால் ஒரு ஜனநாயக ரீதியான அரசாங்கத்தை நிர்வகிக்க முடியாதென்று குறிப்பிட்டுள்ளார்.

பொருளாதார ரீதியாக நோக்கும்போது இலங்கை ஏற்கனவே கடனாளியாக இருக்கின்றது. இலங்கையால் கடன் தொகைகளை மீளச்செலுத்த முடியாது என்பதை நன்கறிந்து வைத்துள்ள சீனா இலங்கைக்குதான் வழங்கிய கடன்தொகைக்கு மாற்றீடாக இலங்கையில் தனது நடவடிக்கைகளை படிப்படியாக மேலோங்க வைத்துள்ளது. இதன் காரணமாக இலங்கை பிராந்திய வல்லரசுகளின் அதிருப்திக்கும் உள்ளாகி வருவதை அவதானிக்க முடிகின்றது.

கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்துவின் இலங்கை அரசியல் குறித்த கருத்துக்கள் எப்போதும் சர்வதேச சமூகத்தினாலும் மிக ஆழமாகக் கவனத்தில் கொள்ளப்படுகின்றன.

சர்வதேச மனித உரிமைகள் தினம் என்னும்போது அடிப்படை மனித உரிமைகளின் பாதுகாப்பு பற்றியதாக மட்டும் கருதுவதாக காணப்படவில்லை. உறுதிப்பாடற்ற அரசியல் நிலவரம் மற்றும் குழப்பகரமான பொருளாதார நிலவரம் என்பவையும் அடிப்படை மனித உரிமைகளை பாதிப்பதாகவே இருக்கின்றன.

அடிப்படை மனித உரிமைகள் மீறல்களைப் பொறுத்தவரை இலங்கை உலகில் ஒரு முன்னணி நாடாக இருக்கின்றது.

இலங்கையில் 1978ஆம் ஆண்டு நிறைவேற்று அதிகார ஆட்சி முறையின் தோற்றம் அடிப்படை மனித உரிமைகளை மிக மோசமாக பாதித்துவிட்டுள்ளதையே அவதானிக்க முடிகின்றது.



அடிப்படை மனித உரிமைகள் மீறல்க ளால் இலங்கையில் பாதிக்கப்பட்டோர் என்ற ரீதியில் வடக்கு - கிழக்கு மக்களே பெரிதும் குறிப்பிட்டுச் சொல்லப்பட வேண்டியவர்களாக இருக்கின்றனர்.

காணாமல் ஆக்கப்பட்டோர், கைது செய்யப்பட்டு சிறைகளில் நீதி விசாரணைகளின்றி அடைத்து வைக்கப்பட்டிருப்போர், இடம்பெயர்ந்து தமது சொந்த இடங்களுக்கு திரும்ப முடியாதிருப்போர், வீடு வாசல்களை இழந்திருப்போர் ஆகியோரும் அடிப்படை மனித உரிமைகள் மீறல்களுக்குள்ளானோரில் அடங்குகின்றனர்.

கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து மேலும் கருத்து வெளியிட்ட போது இந்த நாட்டில் பௌத்த குருமார்களும், மறுபுறம் இராணுவத்தினரும் ஆட்சியதிகார விடயங்களை தீர்மானிக்கும் இரு வேறு சக்திகளாக இருக்கின்றனர் என்று தெரிவித்துள்ளார்.

கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து பௌத்த குருமாரினதும் படைத்தரப்பினரதும் ஆதிக்கம் ஆட்சியதிகார விடயங்களில் செல்வாக்குச் செலுத்துவதை குறிப்பிட்டுள்ள தருணத்திலேயே கொழும்பில் சில வருடங்களுக்கு முன்னர் பதினொரு இளைஞர்கள் கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகியுள்ள முன்னாள் கடற்படைத்தளபதி அட்மிரல் வசந்த கரன்னாகோட வடமேல் மாகாண ஆளுநராக இரு தினங்களுக்கு முன்னர் நியமிக்கப்பட்டுள்ளார். இந்நியமனம்கூட அடிப்படை மனித உரிமைகள் மீறல்கள் குறித்து சிறிதளவேனும் அரச தரப்பு அக்கறை கொள்ளவில்லை என்பதையே எடுத்துக்காட்டுகின்றது.

இதுதவிர யாழ்ப்பாணம் - மிருசுவில் படுகொலை வழக்கில் இலங்கையிலுள்ள சகல தரத்திலுமான நீதிமன்றங்களால் குற்றவாளியாக காணப்பட்ட சுனில் ரத்நாயக்க என்ற சிப்பாய் பொது மன்னிப்பின் அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

இத்தகைய பின்னணியில் கலாநிதி பாகிய சோதி சரவணமுத்து மக்கள் வீதியில் அரசுக்கு எதிராக இறங்கும் சூழ்நிலைகள் பற்றி குறிப்பிட்டுள்ளார். ஏற்கனவே மாபெரும் மக்கள் பேரணி அரசுக்கு எதிராக கொழும்பில் கடந்த மாதம் இடம்பெற்றிருந்தது.

மக்களின் அதிருப்தி பெரும் ஆர்ப்பாட்டமாக மாறும் சூழ்நிலை பற்றி குறிப்பிட்டுள்ள கலாநிதி பாக்கிய சோதி சரவணமுத்து மக்களின் உணர்வுகளை நசுக்கும் விதத்தில் ஆயுதப்படையினரின் பலம் பிரயோகிக்கப் பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை எனவும் எச்சரித்துள்ளார்.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



**டிசெம்பர் - 13 திங்கட்கிழமை**
**பிலவ வருடம் - கார்த்திகை - 27**
**நல்ல நேரம் : 6.00 - 7.30**
**ராகு காலம் : 7.30 - 9.00**
**திதி : தசமி**




**மேடம்**
மனதில் ஏற்பட்டிருந்த திடீர்க் குழப்பம் இன்று நீங்கும். எதிலும் சாதகமான பலன் கிடைக்கும். எதிர்பாராத வரவு உண்டு. வாகனங்களில் செல்லும் போது கவனமாக இருக்கவும்.

**இடபம்**
உடன்பிறந்தவர்கள் ஆதரவாக இருப்பர். செலவை குறைத்துக்கொண்டு பண தட்டுப்பாட்டைக் குறைப்பீர்கள். எதிர்பாராத தடை ஒன்று ஏற்பட்டு நீங்கும். மனதில் உற்சாகம் மிகும்.

**மிதுனம்**
திட்டமிட்ட பணிகள் விரைந்து முடியும். நிதி நிலை அருமையாக இருக்கும். உறவினர், நண்பர்களுடன் வீண் விவாதங்களை தவிர்ப்பது நல்லது. உறவினர்களுடன் இருந்த மனஸ்தாபங்கள் விலகும்.

**கடகம்**
உங்களின் கூடுதல் முயற்சிகள் பலன் தரும். உடல் உபாதைகள் நீங்கும். பிரச்னையில் சிக்கினாலும் அதிலிருந்து சாமர்த்தியமாக விலகுவீர்கள். வளர்ச்சியில் இருந்த முட்டுக்கட்டைகள் நீங்கும்.

**சிம்மம்**
உங்களின் பேச்சு, செயல்பாடுகளின் மூலம் நன்மை உண்டாகும். மற்றவர்களுக்கு உதவி செய்யும் எண்ணம் உண்டாகும். உற்சாகம் கூடும். பழைய முதலீடுகள் இப்போது லாபம் அளிக்கும்.

**கன்னி**
புதிய இனங்களில் முதலீடு செய்யும் முன் நன்றாக யோசிப்பது நல்லது. அலைச்சலுக்கு நற்பலன். உங்களின் முகப்பொலிவு பிறரை கவரும். குடும்பத்தினருடன் இருந்த கருத்து வேறுபாடு நீங்கும்.

**துலாம்**
செலவு கூடும். அக்கம்பக்கத்தினரை அனுசரித்து செல்வீர்கள். தன்னம்பிக்கை அதிகரிக்கும். மனதில் இருந்த கவலைகள் தீரும். விடாமுயற்சி செய்து எடுத்த செயலில் வெற்றி பெறுவீர்கள்.

**விருட்சிகம்**
மாணவர்கள் கூடுதல் கவனத்துடன் படிப்பது நல்லது. பணியிலும், கல்வியிலும் முக்கிய நபர்களின் உதவி கிடைக்கும். வெளிநாடு சம்பந்தப்பட்ட விஷயத்தில் சாதகமான பலன் உண்டு.

**தனுசு**
எடுத்த விஷயத்தை திறமையாக செய்து முடிக்க உங்களுக்கு உதவி கிடைக்கும். வியாபாரம் முன்னேற்ற பாதையில் செல்லும். உழைப்பால் பலன் வரும். வாழ்வில் பிடிப்பும், நம்பிக்கையும் ஏற்படும்.

**மகரம்**
வேலை தேடுபவர்களுக்கு புதிய வேலைவாய்ப்பு கிடைக்கும். குழந்தைகளிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மகிழ்ச்சியான நாள். மேலதிகாரிகள் முக்கிய விஷயங்களில் பக்கபலமாக இருப்பார்கள்.

**கும்பம்**
பேச்சினால் குடும்பத்தில் ஏற்பட்ட பிரச்னை ஒன்று தீரும். மனதில் உற்சாகம் குறையாமல் பார்த்துக் கொள்ளுங்கள். சேமிப்பில் ஆர்வம். எதையும் எதிர்கொள்ளும் மன வலிமை உண்டாகும்.

**மீனம்**
நீங்கள் எடுத்த பணிகளில் சாதகமான போக்கு காணப்படும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். பிரச்னை ஒன்று தீரும். உங்களின் உழைப்புக்கேற்ற பலன் கிடைக்கும். நிம்மதி கூடும்.

# சசிகலாவின் தொடர் சந்திப்புக்கள் குழப்பத்தில் அ.தி.மு.க. தலைமை

## ரஜினியை தொடர்ந்து விஜயகாந்தை சந்திக்க திட்டம்

சென்னை, டிசெ. 13

பிரபல நடிகர் ரஜினிகாந்தைச் சந்தித்த சசிகலா, அடுத்து தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் மற்றும் பிரேமலதாவைச் சந்திக்கத் திட்டமிட்டுள்ளார் என தமிழக வட்டாரங்கள் தெரிவித்தன. சுசிகலாவின் இந்தச் சந்திப்புக்கள் தமிழக அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள அதேவேளையில், அ.தி.மு.க. தலைமை இதனை உன்னிப்பாக அவதானித்து வருகின்றது.

கடந்த ஜனவரி மாதம் சசிகலாவின் விடுதலை தமிழ்நாட்டு அரசியலில் பேசுபொருளானது. அப்போது, அவர் இனியும் அரசியலில் தொடர வேண்டுமா என்பது குறித்து விவாதங்களும் நடந்தன.

அந்த நிலையில் செய்தியாளர்களிடம் பேசிய தே.மு.தி.க. பொருளாளரும் விஜயகாந்தின் மனைவியுமான பிரேமலதா, "பெண் என்ற முறையில் சசிகலாவிற்கு எனது ஆதரவு உண்டு. சசிகலா விவகாரத்தில் அதிமுக நல்ல நிலைப்பாட்டை எடுக்க வேண் டும். தமிழக அரசியலில் சசி கலா பங்கேற்க வேண்டும் என்பது என்னுடைய விருப்பம். சசிகலாவினால் ஆதாயம் அடைந் தவர்கள் அவரை வேண்டாம் எனக் கூறுவது வருத்தம் அளிக்கிறது" என்று வெளிப் படையாக பேசினார். அதன் பின் அ.தி.மு.க. கூட்ட ணியில் தே.மு.தி.க. தொடரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



சசிகலா சென்னை வந்த பிறகு பலர் தி நகர் அபி புல்லா வீட்டில் தங்கி யுள்ள அவரை நேரடி யாகச் சந்தித்து தங்கள் ஆதரவைத் தெரியப் படுத்தி வருகிறார்கள். சசிகலாவே சிலரை வீடுத் தேடிப் போய் சந்தித்து வருகிறார். அந்த வகையில் டிசெம் பர் 6 ஆம் திகதி நடிகர் ரஜினி காந்த்தை அவரது இல்லத்துக்குச் சென்று சந்தித்துவிட்டு வந்தார்.

இந்த நிலையில் அடுத்த கட்டமாக தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் வீட்டுக்குச் சென்று விஜயகாந்த் உடல்நிலையை விசாரித்துவிட்டு, பிரேமலதாவை சந்தித்து அரசியல் ரீதியான ஆதரவு கேட்க சசிகலா தயாராகி வருவதாகக் சொல்கிறார்கள் சசிகலா ஆதரவாளர்கள். சசிகலாவின் இந்த அடுத்தடுத்த நகர்வுகள் அ.தி.மு.க. தலைமை நிர்வாகிகளை குழப்பத்தில் ஆழ்த்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

---

# அ.தி.மு.கவுடனான தேர்தல் கூட்டணி உள்ளூராட்சி தேர்தலிலும் தொடரும்

## த.மா.கா தலைவர் ஜி.கே.வாசன் உறுதி

சென்னை, டிசெ. 13

நடைபெறப்போகும் உள்ளாட்சி தேர்தலிலும் அ.தி.மு.கவுடன் கூட்டணி தொடரும் என தமாகா தலைவர் ஜி. கே. வாசன் தெரிவித்திருக்கின்றார்.

த.மா.கா. இலக்கிய அணி சார்பில், பாரதியாரின் 140 ஆவது பிறந்த நாள் விழா சென்னை சேப்பாக்கத்தில் நேற்று நடைபெற்றது. இதில் கலந்துகொண்ட பின்னர் ஜி.கே. வாசன் செய்தியாளர்களிடம் கூறும்போது, "நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலில் அ.தி.மு.க. உடனான கூட்டணி தொடர்கிறது. போட்டியிடும்



இடங்கள் மற்றும் வெற்றி வாய்ப்பு குறித்து ஆலோசிக்க, வரும் 18 ஆம் திகதி கட்சியின் செயற்குழுக் கூட்டம் நடைபெற உள்ளது. வேளாண் சட்டத்தை பெரும்பான்மையான கட்சிகள், விவசாயிகள் ஏற்றுக்கொண்டபோதும், சில மாநில விவசாயிகள் ஏற்றுக் கொள்ளாமல் போராட்டம் நடத்தியதால், ரத்து செய்யப் பட்டுள்ளது. எனினும், அனைத்து தரப்பு விவசாயிகளும் ஏற்றுக் கொள் ளும் வகையில் மீண்டும் வேளாண் சட்டம் கொண்டு வரப்படும் என நம்புகிறேன்.

ஒமைக்ரான் தொற்று குறித்து மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். தமிழக அரசு மீது மக்களுக்கு நிறைய எதிர்பார்ப்பு உள்ளது. ஆனால், கொடுத்த வாக்குறுதிகளை அரசு நிறைவேற்றவில்லை. தி.மு.க. அரசு மக்களை ஏமாற்றக் கூடாது". இவ்வாறு அவர் கூறினார்.

---

# பா.ஜ.கவுக்கு ஆதரவாக தி.மு.க. செயல்படுகிறது



## சீமான் குற்றச்சாட்டு

சென்னை, டிசெ. 13

பா.ஜ.க வை எதிர்ப்பதாக கூறிக் கொள்ளும் திமுக அரசு புதியக் கல்விக் கொள்கை, வீடு தேடி கல்வி திட்டம் என பல வற்றை தொடர்ந்து ஆதரித்து வருவதாக நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் குற்றம் சாட்டியுள்ளார்.

20 ஆண்டுகளுக்கு மேல் சிறையில் இருக்கும் இஸ்லாமியர்களை விடுவிக்க வேண்டும் என்றும், ராஜீவ் கொலை வழக்கில் சிறையில் இருக்கும் 7 பேரை விடுதலை செய்ய வலியுறுத்தி நேற்று நண்பகல் 12 மணியளவில் நாம் தமிழர் கட்சி சார்பாக ஆர்ப்பாட்டம் நடந்தது. இஸ்லாமியர்கள், முக்கிய நிர்வாகிகள் உட்பட 500 பேர் கலந்து கொண்டு தமிழக அரசுக்கு எதிராக முழக்கம் எழுப்பினர்.

பின்னர் செய்தியாளர்களின் கேள்விகளுக்கு பதில் அளித்து பேசிய சீமான், "கடந்த அதிமுக ஆட்சியில் அண்ணா பிறந்த நாளையொட்டி, சிறையில் இருப்பவர்கள் விடுதலை செய்ததில் ஒரு இஸ்லாமியர்கள் கூட இல்லை. அ.தி.மு.க., தி.மு.க. இவர்களை தொடர்ந்து வாக்கு அரசியலுக்காக மட்டுமே பயன்படுத்துகின்றனர். எதிர்க்கட்சியாக இருந்தபோது குரல் கொடுத்த தி.மு.க. ஆட்சிக்கு வந்த பின் கண்டு கொள்ள வில்லை. எனவே 20 ஆண்டுகளுக்கு மேலாக சிறையில் இருக்கும் இஸ்லாமியர்களை விடுவிக்க மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். தொடர்ந்து ராஜீவ் கொலையில் இருக்கும் 7 பேரை விடு விக்கவும் நடவடிக்கை எடுக்க வில்லை" என்றார். மேலும் பேசிய அவர், "அதேபோல் மத்திய அரசை எதிர்ப்பதாக கூறும் தி.மு.க. ஆளுநர் சந்திக்கு பிறகு புதிய கல்விக் கொள்கையில் நல்ல விஷயம் இருக்கிறது. வீடு தேடி கல்வி திட்டம் என பல விஷயம் ஆதரவு கொடுக்கிறது. எதிர்க்காலத்தில் கூட்டணிக்கான இணைப்பு திட்டமோ என சந்தேகம் வரும் அளவிற்கு அவர்கள் செயல்பாடுகள் இருக்கிறது. இதை தான் முன்பே நான் குறிப்பிட்டேன்" என்று கூறினார்.

# சிற்றூர்தி - டிப்பர் விபத்து; வரணியில் மூவர் படுகாயம்!

**வடமராட்சி, டிசெ. 12**

**பயணிகளுடன் பய ணித்த சிற்றூர்தியின் பின்பக்கமாக டிப்பர் வாகனம் மோதியதில் 3 பேர் படுகாயமடைந் தனர். வரணி - கொடிகாமம் வீதியில் வரணி சந்தியில் நேற்று ஞாயிற் றுக்கிழமை மதியம் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.**



சிற்றூர்தியின் பின்பக்கமாக வந்தே டிப்பர் வாகனம் மோதியதாகக் கூறப்படுகின்றது. விபத்தில் காயமடைந்த 3 பேர் வரணி பிரதேச வைத்தியசாலையில் உடனடியாக சேர்க்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர்.

இந்த விபத்து தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-2)



# 300 கிலோ எடை கடலாமையுடன் நாவாந்துறையில் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், டிசெ. 13

நாவாந்துறையில், 300 கிலோ நிறையுடைய கடல் ஆமையுடன் ஒருவர் கைது செய்யப்பட்டாரென யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைய இந்த கைது முன்னெடுக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை, யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், கடல் ஆமையை ஆழ்கடலில் கொண்டு சென்று விடவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

# மாகாண சபைத் தேர்தலை நடத்த அரசு முயல்வது மக்கள் விரோதம்!

## பொதுஜன பெரமுன எம். பி. சொல்கிறார்

கொழும்பு, டிசெ. 13

கோவிட்-19 வைரஸ் தாக்கத்தின் காரணமாக புதிய அரசமைப்பு உருவாக்கத்திற்கான நடவடிக்கைகள் தாமதப்படுத்தப்பட்டுள்ளது என்று குறிப்பிடுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. புதிய அரசமைப்பு உருவாக்கம் திட்டமிட்ட வகையில் பிற்போடப்படுகிறது. மாகாண சபை தேர்தலை நடத்த அரசாங்கம் முயற்சிக்கின்றமை கவலைக்குரியது என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் கெவிந்து குமாரதுங்க தெரிவித்தார்.

கொழும்பில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக்கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

2019 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல் கால பிரசார மேடைகளில் அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தம் உருவாக்கம், ஒற்றையாட்சி முறைமையை உறுதிப்படுத்தும் அரசமைப்பு உருவாக்கம் ஆகியன பிரதான பேசுபொருளாக காணப்பட்டது. காலத்திற்கு பொருந்தும் வகையில் புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்பதை 69 இலட்ச மக்கள் ஏற்றுக் கொண்டார்கள்.

2020ஆம் ஆண்டு இடம் பெற்ற பொதுத்தேர்தலின் வெற்றியை தொடர்ந்து அரசியலமைப்பின் 19ஆவது சட்டம் நீக்கப்பட்டு 20ஆவது அரசியலமைப்பு திருத்தம் விரை வாக உருவாக்கப்பட்டது. 20ஆவது திருத்தத்தில் மக்களா ணைக்கு முரனான ஒரு சில விட யங்கள் உள்வாங்கப்பட் டுள்ளன.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் இரண்டாண்டு பதவி காலம் நிறைவு பெறுவதற்கு முன்னர் புதிய அரசமைப்பிற்கான மூல வரைபை பாராளுமன்றில் சமர்ப்பிப்பதாக நீதிய மைச்சர் அலிசப்ரி பாராளுமன்றில் வாக்குறுதியளித்தார். இதுவரையில் மூல வரைபு பாராளுமன்றில் சமர்ப்பிக்கப் படவில்லை.புதிய அரசமைப்பு உருவாக்கத்திற்கான நடடிவக்கைகள் கோவிட் தாக்கத்தின் காரணமாக தாமதமடைகிறது என குறிப்பிடுவதை ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

புதிய அரசமைப்பு உருவாக்கம் திட்டமிட்ட வகையில் பிற்போடப்படுகிறதா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. அரசமைப்பின் 13ஆவது திருத்தம் தேவையற்ற பிரச்னைகளை மாகாண சபை முறைமை ஊடாக ஏற்படுத்தியுள்ளது. புதிய அரசியலமைப்பின் ஊடாக மாகாண சபை முறைமையை இரத்து செய்வதாக குறிப்பிடப்பட்டது. தற்போது மாகாண சபை தேர்தலை நடத்த அரசாங்கம் முயற்சிக்கின்றமை மக்களாணைக்கு விரோதமானதாகும் - என்றார்.




# 26 குடும்பங்களுக்கு உலர் உணவு பொருள்!

மானிப்பாய், டிசெ. 13

பூமணி அம்மா அறக்கட்டளையால் யாழ்ப்பாணத்தை சேர்ந்த உதவி தேவைப்படும் 26 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன.

சுண்டுக்குளி - ஈச்சமோட்டை ஜே/66 கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த குடும்பங்களுக்கே உலர் உணவு நிவாரண பொருட்கள் நேற்று முன்தினம் சனிக்கிழமை வழங்கி வைக்கப்பட்டன.

பூமணி அம்மா அறக்கட்டளையின் ஸ்தாபக தலைவரும் சர்வதேச தமிழ் வானொலி பிரான்ஸ் பணிப்பாளருமான சரவணையூர் விசுவாசம் செல்வராசாவின் நெறிப்படுத்தலில் குறைந்த வருமானமுடைய குடும்பங்களுக்கு இந்த உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன.

அந்த அமைப்பின் நிர்வாகிகளான செயலாளர் ந. விந்தன் கனகரட்ணம், உப செயலாளர் இ. சற்குருநாதன், இணைப்பாளர் ரி. யோசேப், தலைவர் தனேந்திரன், நிர்வாக சபை உறுப்பின் .சத்தியா, ஆலோசகர் இ. மயில்வாகனம் ஆகியோர் இந்த நிகழ்வில் பங்கேற்றனர். (ஐ-5)

# கசிப்புடன் ஒருவர் கைது!

வடமராட்சி, டிசெ. 13

நெல்லியடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட துன்னாலை பகுதியில், கசிப்புடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

புலனாய்வு பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைய இவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். சந்தேக நபரின் வீட்டில் இருந்து ஒன்றரை லீற்றர் கசிப்பு மீட்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ-2)





நல்லூர் சிவன் கோவில் என அழைக்கப்படும் ஸ்ரீ கமலாம்பிகை சமேத ஸ்ரீ கைலாசநாத சுவாமி ஆலய பெருந்திருவிழா நேற்றுமுன்தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமானபோது....!

படங்கள் – ஐ.சிவசாந்தன்

ஈழநாடு





## ஓட்டோவை மோதியது ரயில் பாய்ந்து உயிர்தப்பினார் சாரதி

### வவுனியாவில் நேற்று சம்பவம்

வவுனியா, டிசெ. 13

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்தை நோக்கி வந்துகொண்டிருந்தரயில் வவுனியாவில் முச்சக்கர வண்டியை மோதியது. இதன்போது முச்சக்கர வண்டியின் சாரதி பாய்ந்தமையால் மயிரிழையில் உயிர் தப்பினார்.

நேற்று முற்பகல் 10.45 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கொழும்பில் இருந்து யாழ். நோக்கி சென்ற கடுகதி புகையிரதமானது தாண்டிக்குளம் பகுதியில் பயணித்துக் கொண்டிருந்தபோது குறித்த பகுதியில் இருந்த பாதுகாப்பற்ற புகையிரதக் கடவையை கடக்க முற்பட்ட முச்சக்கர வண்டியுடன் மோதி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தால், சுமார் 50 மீற்றர் தூரத்திற்கு முச்சக்கர வண்டி இழுத்துச் செல்லப்பட்டதுடன், அது முழுமையாக சேதமடைந்துள்ளது. முச்சக்கர வண்டி சாரதி அதிலிருந்து பாய்ந்தமையால் மயிரிழையில் உயிர் தப்பினார். இந்த விபத்து தொடர்பில் வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, குறித்த பாதுகாப்பற்ற புகையிரதக் கடவையில் பல தடவைகள் விபத்துக்கள் ஏற்பட்டிருந்தமையும், உயிரிழப்புக்கள் ஏற்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சைக்கிளில் சென்றவரை டிப்பர் மோதியதில் ஒருவர் படுகாயம்!

வவுனியா, டிசெ. 13

வவுனியா, புளியங்குளம் பகுதியில் டிப்பர் - சைக்கிளை மோதி ஏற்படுத்திய விபத்தில் ஒருவர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நேற்றுக் காலை இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, புளியங்குளம் இராமனூர் பகுதியிலுள்ள எரிபொருள் நிலையத்திற்கு அண்மையில் வீதியோரமாக சைக்கிளில் சென்றவரை அதே வழியில் வந்த டிப்பர் வாகனம் மோதியுள்ளது.

இவ்விபத்தில் டிப்பர் வாகனத்தின் கீழ் பகுதியில் சைக்கிள் சிக்குண்டதுடன், அதனை செலுத்திச் சென்றவர் காயங்களுடன் உயிர்தப்பினார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை புளியங்குளம் போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## 50 அத்தியாவசிய பொருட்கள் குறைந்த விலைக்கு விற்கப்படும்!

### அமைச்சர் பந்துல அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 13

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு, நேற்று முதல் வருடஇறுதி வரை சதொச வர்த்தக நிலையங்களில், சில வகையான அரிசிகளை, 100 ரூபாய்க்கும் குறைந்த விலையில் கொள்வனவு செய்ய முடியும் என வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன அறிவித்துள்ளார்.

சதொச வர்த்தக நிலையங்களில், 50 அத்தியாவசிய பொருட்களை நேற்று முதல் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாடு அரிசி ஒரு கிலோகிராம் 99 ரூபாய் 50 சதத்திற்கும், சம்பா அரிசி ஒரு கிலோகிராம் 130 ரூபாய்க்கும் சதொச வர்த்தக நிலையங்களின் மூலம் விற்பனை செய்யப்படுகிறது.

எந்தவொரு அரிசி வகையையும், சதொசாவில் தலா 5 கிலோகிராம் அளவிலேயே பெற்றுக்கொள்ள முடியும்.

சீனி ஒரு கிலோகிராம் 125 ரூபாய்க்கும், பருப்பு ஒரு கிலோகிராம் 240 ரூபாய்க்கும், நூடில்ஸ் ஒரு பைக்கெற் 125 ரூபாய்க்கும், சவர்க்காரம் உள்ளிட்ட 50 பொருட்களை, சந்தையில் நிலவும் விலையை விடவும், குறைந்த விலையில் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் அமைச்சர் பந்துல குணவர்த்தன மேலும் தெரிவித்தார். (ஐ)

# தவறு ஒன்று நடந்தால் அதை ஏற்றுக்கொள்வது அவசியம்!

### சமையல் எரிவாயு விடயம் குறித்து அமைச்சர் ரமேஷ் பத்திரண கருத்து



கொழும்பு, டிசெ. 13

**“நாட்டில் சமையல் எரிவாயு ஒழுங்குபடுத்தல்கள் தொடர்பில் பல குறைபாடுகள் உள்ளன. இதனை அரசு என்ற ரீதியில் நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும்.”**

- இவ்வாறு பெருந்தோட்டத் துறை அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

சீனிகம தேவாலயத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றின் பின் னர், ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்த தாவது:-

“நாட்டில் சமையல் எரிவாயு ஒழுங்குப்படுத்தல் தொடர்பில் குறைபாடு உள்ளதென்பதை ஏற்றுக்கொள்கின்றோம். அது எமது ஆட்சியில் மாத்திரமல்ல. கடந்த 40 வருடங்களாக இந்தப் பிரச்னை காணப்பட்டது.

அதனை உள்ளார்ந்த ரீதியில் நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். தவறு ஒன்று நடந்தால் அந்த தவறை ஏற்றுக்கொள்வது அவ சியம்” - என்றார். (இ)

## ‘மாவீரன் கர்ணன்’ பெயர் விவகாரம் இருவர்மீது பொலிஸார் விசாரணை

முல்லைத்தீவு, டிசெ. 13

‘மாவீரன் கர்ணன்’ என்று ஓட்டோவின் பின்புறத்தில் எழுதி வைத்திருந்தமைக்காக இரு இளைஞர்களை முல்லைத்தீவு பொலிஸார் விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர்.

அத்துடன், ஒருவரை கைது செய்து பின்னர் விடுவித்துமுள்ளனர்.

புதுக்குடியிருப்பு ஆனந்தபுரத்தை சேர்ந்த சேர்ந்த சகோதரர்களான தர்மராசா பிந்துசன் (வயது 21), தர்மராசா கனிஸ்ரன் (வயது 19) ஆகியோரே இவ்வாறு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

பயங்கரவாதத்தை இந்த சொல் தூண்டுவதாகத் தெரிவித்தே பொலிஸாரால் இளைஞர்கள் கைது செய்யப்பட்டதுடன், 3 ஆயிரத்து 300 ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டது.




அத்துடன், அந்த ஸ்ரிக்கரை ஓட்டோவிலிருந்து அகற்றுமாறும் மிரட்டல் விடுக்கின்றனர். இதனால், தாம் மன ரீதியாக பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகத்தில் பாதிக்கப்பட்டவர்கள் தொலைபேசி மூலம் முறையிட்டுள்ளனர் என்று கூறப்படுகின்றது.

முன்னதாக, 19 வயதான இளைஞரை விசாரணைக்கு ஒத்துழைக்கவில்லை என்று கூறி பொலிஸார் கடந்த 9ஆம் திகதி கைது செய்து பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்தினர். பின்னர் மறுநாள் பொலிஸ் நிலையில் விடுவிக்கப்பட்டனர் என்றும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டது.

இதனிடையே, மகாபாரத கதையில் வரும் கர்ணன் பாத்திரம் மீதான ஈர்ப்பினாலேயே தாம் மாவீரன் கர்ணன் என எழுதப்பட்ட ஸ்ரிக்கரை ஓட்டோவில் ஒட்டினார் என்றும் ஓட்டோவின் சாரதி தெரிவித்துள்ளார். (இ)

## நீர்கொழும்பு விடுதியில் இரண்டு பெண்கள் கைது

கொழும்பு, டிசெ. 13

கம்பஹா, நீர்கொழும்பு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில், ஆயுர்வேத சிகிச்சை நிலையம் என்ற பெயரில் இயங்கி வந்த விபச்சார நிலையம் ஒன்று, நேற்று முன்தினம் முற்றுகையிடப்பட்டுள்ளது

இதன்போது, விபச்சார விடுதியை நடத்திவந்த நப ரையும் பெண்ணொருவரையும் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

மீகலேவ மற்றும் கல்கமுவ ஆகிய பிரதேசங்களை சேர்ந்த 24, 22 வயதுடைய இருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே, குறித்த இருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (கே)

## ஆசிரியர் தாக்கியதில் மாணவர் படுகாயம்!

கொழும்பு, டிசெ. 13

கம்பஹா, வெயாங்கொடையிலுள்ள பிரபல பாடசாலையொன்றில், தரம் 13 இல் கல்வி பயின்றுவரும் மாணவர் ஒருவர், ஆசிரியர் ஒருவரினால் கடுமையாக தாக்கப்பட்ட நிலையில் வத்துப்பிட்டி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று வெயாங்கொடை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த மாணவர் கடந்த 10ஆம் திகதி பாடசாலைக்கு சமூகமளிக்கவில்லை என்றும் இதன் காரணமாக ஆசிரியர் மாணவரை கடுமையாக தாக்கியுள்ளார் என்றும் ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக வெயாங்கொடை பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் சன்ன வென்னேவ தெரிவித்துள்ளார். பிளாஸ்ரிக் குழாய் மூலம் குறித்த மாணவனை ஆசிரியர் தாக்கியுள்ளார் என்று தெரிய வருகிறது. நிட்டம்புவ, ஹூமுட்டி யாவ பிரதேசத்தை சேர்ந்த ஆசி ரியர் தப்பி சென்றுள்ள நிலையில் அவரை கைது செய்வதற்கான நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.



## துஷ்பிரயோகத்தில் பிக்கு; நீக்கக்கோரி ஆர்ப்பாட்டம்

மட்டக்களப்பு, டிசெ. 13

மட்டக்களப்பு, ஏறாவூர் புன்னக்குடா பகுதியில் வசித்து வரும் சிங்கள மக்கள் தங்களது கிராமத்தில் இருக்கும் பிரதான பிக்குவை உடனடியாக நீக்குமாறு கோரி நேற்று ஞாயிற்றுக் கிழமை காலை ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுத்துள்ளனர்.

கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னதாக 11 வயது மதிக்கத்தக்க பிக்கு படிப்புக்காக வந்த சிறுவன் ஒருவனை பாலியல் துஷ்பிரயோகம் செய்ததன் அடிப்படையில் கைது செய்யப்பட்டு நீதிமன்றம் ஊடாக சிறைப்பிடிக்கப்பட்டு இருந்தார்.

பிணை மனு அடிப்படையில் மீளவும் வெளியில் வந்த பிக்கு குறித்த விகாரையில் தொடர்ந்தும் இருப்பதனால் பிக்குவை உடனடியாக நீக்குமாறு கோரியும் தங்கள் மாணவர்களின் சமய நடவடிக்கைகளுக்கு அனுப்புவதற்கு அச்சம் உள்ளதாகவும் ஆர்ப்பாட்டக் காரர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ)

## 20 வயதுக்கு மேற்பட்டோர் பூஸ்டர் டோஸை பெறலாம்!

### இராஜாங்க அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 13

இரண்டாம் கட்ட தடுப்பூசியைப் பெற்று 3 மாதங்கள் நிறைவடைந்த 20 வயதுக்கு மேற்பட்ட சகலரும் மூன்றாம் கட்ட தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமண தெரிவித்தார்.

தகுதியுடைய நபர்கள் எந்தவொரு தடுப்பூசி நிலையத்திற்கும் சென்று அதனைப் பெற்றுக் கொள்ள முடியும். முதல் இரு கட்டங்களாகவும் அஸ்ட்ராசெனகா, சினோபார்ம், ஸ்புட்னிக் மற்றும் மொடர்னா என எவ்வகை தடுப்பூசியைப் பெற்றுக் கொண்டவர்களும் மூன்றாம் கட்டமாக பைசர் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ள முடியும்.

ஆரம்பத்தில் மூன்றாம் கட்ட தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதில் மக்கள் மத்தியில் பின்னடைவை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. எவ்வாறிருப்பினும் தற்போது மக்கள் மிகுந்த ஆர்வத்துடன் மூன்றாம் கட்ட தடுப்பூசியைப் பெற்றுக் கொள்கின்றனர்.

இம்மாதத்தின் இறுதி இரு வாரங்களில் பண்டிகை கொண்டாட்டங்கள் இடம்பெறக் கூடும். அவற்றைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று நாம் எதிர்பார்க்கவில்லை.

எனவே கொண்டாட்டங்களுக்கு முன்னர் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம். மாறாக மூன்றாம் கட்ட தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளாமல் பண்டிகை கொண்டாட்டங்களில் ஈடுபட்டால் டிசெம்பர் மாத இறுதியில் கொவிட் சுனாமியை எதிர்கொள்ள தயாராக வேண்டும் என்றும் அவர் கூறினார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் கூறினார். (ஐ)

## நாட்டின் முதல் கேபிள் கார் திட்டம் சுவீடனுடன் ஒப்பந்தம் கைச்சாத்து!

கொழும்பு, டிசெ. 13

நுவரெலியா பிரதேசத்தில் கேபிள் கார் திட்டத்தை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தத்தில் அரசாங்கம் சுவீடன் நாட்டு நிறுவனத்துடன் கைச்சாத்திட்டுள்ளது.

இரு கட்டங்களைக் கொண்ட கேபிள் கார் திட்டத்தின் கட்டுமானப் பணிகள் 18 மாதங்களுக்குள் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நானு ஓயாவிலிருந்து நுவரெலியா வரை 4 கிலோமீற்றர் தூரத்தில் இரண்டு கட்டங்களாக நிர்மாணிக்கப்படும் இந்த கேபிள் கார் பாதையானது சுவீடன் வெளிநாட்டு உதவித் திட்டத்தின் கீழ் முழுமையாக நிதியளிக்கப்பட்டுள்ளது.

55 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் 30 ஆண்டு குத்தகைக்கு இந்த திட்டம் உருவாக்கப்படும்.

இது தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சகத்தின் கேட்போர் கூடத்தில் கைச்சாதிட்டப்பட்டது. (ஐ)

# பொதுமக்கள் வீதிக்கு இறங்கினால் அரச படைகளே பதிலளிக்கும் நிலை!

### ஆபத்தை சுட்டிக்காட்டுகிறார் சரவணமுத்து

**கொழும்பு, டிசெ. 13**

**நாட்டின் பொருளாதார நிலைமைகள் நாளுக்கு நாள் மோசமடைந்து வருகின்ற நிலையில் பொதுமக்கள் வீதிக்கு இறங்குவதற்கான ஏது நிலைகள் அதிகரித்துவருகின்றன. அவ்விதமான நிலைமை யொன்று ஏற்படுமாயின் அம்மக்களுக்கு பதிலளிப்பதற்காக அரசாங் கத்தினால் படைகள் களமிறக்கப்படும் ஆபத்தான நிலைமையொன்று ஏற்பட்டுள்ளதாக மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து எச்சரித்துள்ளார்.**

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு பெண்களுக்கான அரசியல் கற்கை நிலையத்தின் ஏற்பாட்டில் சிவில் அமைப்புக்கள் மற்றும் மனித உரிமைகள் செயல்பாட்டாளர்கள் பங்கெடுத்த நிகழ்வு 'ஒன்றிணைவோம்' என்ற தொனிப்பொருளில் தாஜ் சமுத்திரா ஹோட்டலில் நடைபெற்றது.

இதில் அடிப்படை உரிமைகள் உள்ளிட்ட பல்வேறு உரிமைகள் சார் விடயங்கள் கலந்துரையாடப்பட்ட நிலையில் இலங்கையைப் பொறுத்தவரையில் காணப்படுகின்ற சவால்கள் மற்றும் அவற்றைவெற்றி கொள்வதற்கு எவ்விதான நகர்வை செய்ய வேண்டும் என்பதை அடிப்படையாக் கொண்டு முடிவுரையொன்றை ஆற்றிய போதே கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு உரையாற்றுகையில்,

அரசமைப்பில் உள்வாங்கப்பட்டுள்ள உரிமைகளை அனுபவிப்பதற்கு இந்த நாட்டில் உள்ள மக்கள் உரித்தற்றவர்களாக காணப்படுகின்றார்கள். இந்த நிலைமை ஏன் இன்னமும் நீடிக்கின்றது என்பது பற்றிச் சிந்திக்க வேண்டும்.

தற்போது ஆட்சியில் உள்ள ராஜபக்ஷ அரசாங்கத்திற்கு வாக்களித்த 69 இலட்சம் வாக்காளர்களும் இந்த விடயத்தினை தம்முள் மீட்டிப்பார்க்க வேண்டியவர்களாக உள்ளனர்.

ராஜபக்ஷ அரசாங்கமானது இரண்டு கூறுகளால் கட்டமைக்கப்பட்டுள்ளது. ஒன்று பௌத்த தேரர்களை உள்ளடக்கிய சங்கத்தினால் சூழப்பட்டுள்ளது. அடுத்து சீருடை தரித்த இராணுவத்தினரால் சூழப்பட்டுள்ளது. இதுவொரு பயங்கரமான நிலைமையாகும்.

இவ்விதமாக சூழப்பட்டுள்ள அரசாங்கத்திடமிருந்து ஜனநாயக விழுமியங்களை, நடைமுறைகளை எதிர்பார்க்க முடியாது. அரசாங்கமும் அவ்விதமாகவே பிரதிபலிக்கின்றது. குறிப்பாக 20ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றி நிறைவேற்று அதிகாரத்தை வலுப்படுத்தி தனியொரு நபரை சூழ அதிகாரங்கள் குவிக்கப்பட்டுள்ளன.

ராஜபக்ஷவினர் அரசாங்கத்தின் அனைத்துக் கட்டமைப்பிலும் தமது குடும்ப அங்கத்தவர்களை தீர்மானிக்கும் சக்திகளாக அமர்த்தியுள்ளனர். தெற்காசிய அரசியல் கலாசரத்தில் என்றுமே கண்டிருக்க முடியாத அளவிற்கு குடும்பமொன்றின் ஆதிக்கம் வலுவாகியுள்ளது. இதுவொரு துரதிஷ்டமான நிலைமையாகும்.

தற்போது ஒரேநாடு ஒரே சட்டம் என்ற கோட்பாட்டை நடைமுறைப்படுத்துவதற்கான ஞானசார தேரர் தலைமையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ செயலணி ஒன்றை நிறுவியுள்ளார். இந்தச் செயலணி நாட்டின் சட்டத்தினை இயற்றுவதற்கு நடவடிக்கைகளை எடுக்கின்றது. இந்தச் செயலணியில் உள்ள ஞானசார தேரர் நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் குற்றவாளியாக இனங்காணப்பட்டவர் என்பதை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். அவ்விதமானர் சட்டமியற்றுவதற்கான செயலணிக்கு நியமிக்கப்பட்டுள்ளமை மகா சங்கத்தினர் எதிர்க்கவில்லை. அதுபற்றி பேசவில்லை.

இவ்விதமாக இருக்கையில் இந்த நாட்டில் உள்ள சிறுபான்மை தேசிய இனங்கள் தமக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு, போர்க்குற்றங்களுக்கு உள்நாட்டில் தீர்வு கிடைக்கும் என்று எவ்வாறு நம்பிக்கை கொள்வார்கள். அதனால் தான் அவர்கள் சர்வதேச நீதி விசாரணையை கோரி நிற்கின்றார்கள்.

போர் நிறைவுக்கு வந்ததன் பின்னர் இந்த நாட்டில் நல்லிணக்கச் செயல்பாடுகள் முன்னெடுக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அவ்விதமாக நடைபெறவில்லை. இதில் மகாசங்கத்தினர் பங்களிப்பைச் செய்திருக்க வேண்டும். அவர்கள் துளியேனும் பங்களிப்பைச் செய்யவில்லை. இவ்வாறான நிலையில் எவ்வாறு இனங்களுக்கு இடையில் இணக்கத்தினை எதிர்பார்க்க முடியும். மிருசுவில் படுகொலை வழக்கில் இலங்கையில் உள்ள அனைத்து நீதிமன்றங்களாலும் குற்றவாளியாக அடையாளம் காணப்பட்ட சுனில் ரத்நாயக்க ஜனாதிபதியின் பொதுமன்னிப்பில் விடுதலை செய்யப்பட்டுள்ளார். அதுமட்டுமன்றி அரசாங்கத்தில் இராணுவத்தின் வகிபாகம் முழுமைப்படுத்தப்பட்டுள்ளது.

தற்போது நாட்டில் பொருளாதார நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளது. ஆனால், மத்திய வங்கி ஆளுநர் அவ்விதமான எந்த நிலைமைகளும் காணப்படவில்லை என்பது போன்று பிரதிபலிக்கின்றார். ஆனால் அடுத்த ஆண்டின் முற்பகுதியில் மிகமோசமான பொருளாதார நிலைமைகள் ஏற்படும் ஆபத்துள்ளதாக நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். அவ்வாறான நிலைமையொன்று ஏற்படுமாயின் பொதுமக்கள் நிச்சயமாக வீதிக்கு இறங்கி போராட வேண்டிய நிலைமைகளே ஏற்படும்.

இதில் அரசாங்கத்திற்கு வாக்களித்த 69இலட்சம் பேரும் வீதிக்கு வரவேண்டி ஏற்படும். அவ்விதமான நிலையொன்று ஏற்பட்டால் அரசாங்கம் படைகளை பயன்படுத்தியே பதிலளிப்புக்களை செய்யும் ஆபத்துள்ளது. அந்நிலை ஏற்பட்டால் நிலைமைகள் பாரதூரமாகிவிடும். ஆகவே, நாம் நிலைமைகளை மாற்றி அமைக்க வேண்டும் - என்றார். (ஐ)

## 310 கிலோஎடையுள்ள நீலக்கல் இலங்கையில் கண்டுபிடிப்பு!

கொழும்பு, டிசெ. 13

உலகில் மிகப் பெரிய நீலக்கல் இலங்கையில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இரத்தினபுரி - பட்டுகெதர பிரதேசத்திலிருந்து கண்டு பிடிக்கப்பட்டுள்ள இந்த நீலக் கல்லின் எடை 310 கிலோ கிராம் ஆகும். இதற்கு 'ஆசி யாவின் ராணி' என்று பெயரிடப்பட்டுள்ளது.

தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையினால் இந்த நீலக்கல்லிலிருந்து ஐந்து மாதிரிகள் பெற்றுக் கொள்ளப்பட்டு, அவை இரத்தினபுரியிலுள்ள இரத்தினவியல் ஆய்வகத்திற்கு அனுப்பப்பட்டு ஆய்விற்கு உட்படுத்தப்பட்டன.



முன்னெடுக்கப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையில் குறித்த நீலக்கல் உலகிலேயே மிகப் பெரிய நீலக்கல் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகா ரசபை அறிவித்துள்ளது.

அத்தோடு இது மிகவும் அரியவகை நீலக்கல் என்பதோடு , உலகில் எந்தவொரு பகுதியிலும் இதுவரையில் இவ்வாறானதொரு நீலக்கல் கண்டு பிடிக்கப்படவில்லை என்று அதனை ஆய்விற்கு உட்படுத்திய இரத்தினவியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ)

# இலங்கையின் மாகாண சபையும் இந்தியாவின் 13ஆவது திருத்தமும்



**இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் பிதாமகர்களான ஜே.ஆரும், ராஜீவும் இன்று உயிருடனில்லை. ஒப்பந்தத்தை முழுமையாக எதிர்த்த பிரேமதாஸவும் அத்துலத்முதலியும் கூட உயிருடனில்லை. ஒப்பந்தம் பிரசவித்த மாகாண சபை கோட்டாபயவின் புதிய அரசியலமைப்பில் அகற்றப்படப் போகிறது. இனியும் இந்தியாவை நம்பி இலங்கை அரசைப் பகைப்பதா? - இப்படி சம்பந்தன் நினைக்கிறாரோ!**



**பனங்காட்டான்**

சில நாட்களுக்கு முன்னர் எனது நீண்ட நாள் நண்பர் ஒருவரிடமிருந்து மின்னஞ்சலொன்று வந்தது. 1970களிலிருந்து தமிழர் அரசியலை நன்கு அவதானித்து வருபவர் அவர்.

நான்கு விடயங்களை உள்ளடக்கிய இந்த மின்னஞ்சலில் இந்தியா கூட்டமைப்பினரை வருமாறு விடுத்த அழைப்பு, கூட்டமைப்பினர் அதனை அலட்சியம் செய்திருப்பது என்பவற்றை புட்டுக்காட்டியது. மின்னஞ்சலில் தெரிவிக்கப்பட்ட விபரம் பின்வருமாறு இருந்தது:

“புதுடில்லிக்கு வர தயாராக இருக்குமாறு ஏற்கனவே தூதரகம் அறிவித்தது, 7-8 இல் சந்திப்பு என்று தூதரகம் அறிவித்ததும் அதனை சுமந்திரனூடாக பங்காளிக் கட்சிகளுக்கு தெரிவித்தது, சந்தர்ப்பத்தை தவற விட முடியாது - “நான் இல்லாமலே டில்லி போங்கள் என்கிறார் மாவை, மறுநாள் சந்திப்புக்கு வேறு திகதி தருமாறு சம்பந்தன் தூதரகத்தைக் கேட்டது, இதற்கான காரணம் - மாவையின் மகனின் திருமணம் - கடவுச்சீட்டு காலாவதியானது - பாராளுமன்றத்தில் பட்ஜெட் வாக்கெடுப்பு. பஸில் ராஜபக்ஷ பிரயத்தனம் செய்தும் சந்திக்காத மோடி, இவர்களைச் சந்திக்க அழைக்கிறார். ஆனால் இவர்கள் தவிர்க்கின்றனர். சம்பந்தனை யாராவது மிரட்டினரா?”

இதுதான் மின்னஞ்சலில் உள்ளடக்கம். இதன் உண்மைத்துவம், காரணங்களைக் கண்டறிவதற்கு முன்னர், கூட்டமைப்பினர் எதற்காக இந்தியப் பிரதமரைச் சந்திக்க விரும்பினர், அதனால் தமிழருக்கு ஏதாவது அரசியல் ஆதாயம் கிடைக்குமென எதிர்பார்க்கின்றனரா என்பவைகளையும், 1987ஆம் ஆண்டுக்குப் பின்னரான சில அரசியல் அசைவுகளையும் நோக்குவது அவசியம்.

ஜே.ஆர்.ஜெயவர்த்தன ஆட்சியில் தேசியப் பாதுகாப்பு அமைச்சராக பதவி வகித்த லலித் அத்துலத்முதலி வடமராட்சி ஒப்பரேஷன் என்ற பெயரில் பாரிய தமிழின அழிப்பை 1987 இன் நடுப்பகுதியில் ஆரம்பித்தார். இதற்கு முன்னராக இஸ்ரேலின் ஆதரவுடன் 6,000மாக இருந்த இலங்கை இராணுவ எண்ணிக்கையை 24,000 ஆக்கினார். யாழ்ப்பாணக் குடாவில் மக்களை பட்டினி போடும் நோக்கில் உணவு விநியோகத்தைத் தடுத்தார்.

இலங்கையை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரக் காத்திருந்த இந்தியா இதனை தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தி, படகுகள் மூலம் யாழ்ப்பாணத்துக்கு உணவுப் பொருட்களை அனுப்பியது. ஆனால் இலங்கைக் கடற்படை அவைகளை இடைமறித்து திருப்பி அனுப்பியது.

இதன் அடுத்த கட்டமாக, இந்தியா விமானங்கள் வழியாக யாழ்ப்பாணத்தில் உணவுப் பொட்டலங்களை வீசி, ஜெயவர்த்தன அரசுக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்தது. தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை தனது படைகளால் நசுக்க முடியாத நிலையிலிருந்த ஜே.ஆர். இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, இந்தியாவையும் தமிழரையும் மோத வைக்கும் நோக்குடன் இந்தியாவுடன் ஒப்பந்தத்துக்கு உடன்பட்டார். 1987 யூலை 29இல் ஜே. ஆரும் ராஜீவ் காந்தியும் ஒருதலைப்பட்சமாக செய்து கொண்ட இந்த ஒப்பந்தம் ஆயிரமாயிரம் இந்தியப் படைகளை தமிழர் தாயகத்தில் குவிக்க வழி வகுத்தது.

இவையனைத்தும் இடம்பெறும் போது, தமிழர்களின் ஏகப்பிரதிநிதிகளாக ஜே.ஆருடன் வட்டமேசை மாநாடுகள் நடத்திக் கொண்டிருந்த தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி மௌனமாகவிருந்தது. இரு நாட்டுத் தலைவர்களும் செய்து கொண்ட ஒப்பந்தமே இலங்கை அரசியல் யாப்பின் பதின்மூன்றாவது திருத்தம். இதுவே, தமிழர் தாயகமான வடக்கையும் கிழக்கையும் தற்காலிகமாக இணைக்கும் ஒரு மாகாண சபை முறைமையை உருவாக்க ஏதுவாகியது.

மாகாண சபைகளுக்கு அதிகாரப்பரவல் வழங்கப்பட வேண்டுமென்பது பதின்மூன்றாவது திருத்தத்தின் முக்கிய அம்சம். 1987 நவம்பர் 14ஆம் திகதி பதின்மூன்றாவது திருத்தம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இந்தத் திருத்தத்தின் பிரகாரம் தமிழர் தாயகத்துக்கு மட்டுமன்றி, இலங்கையின் மற்றைய ஏழு மாகாணங்களுக்கும் மாகாண சபை உருவாக்கப்பட்டது.

அந்த ஏழு மாகாண சபைகளுக்குமான தேர்தல்கள் 1988 ஏப்ரல் 24ஆம் திகதிக்கும், யூன் 2ஆம் திகதிக்குமிடையில் நடத்தப்பட்டதாயினும், எதற்காக பதின்மூன்றாவது திருத்தம் கொண்டு வரப்பட்டதோ அந்த வடக்கு கிழக்குக்கு தேர்தல் நடத்தப்படவில்லை.

வடக்கையும் கிழக்கையும் ஒரே நிர்வாகக் கட்டமைப்பாக்க கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்பொன்றை 1988 டிசம்பர் 31க்கு முன்னர் நடத்தப்பட வேண்டுமென ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டிருந்தும், ஜே.ஆர். அதனை நடத்தாது தவிர்த்தார். இவ்விடயத்திலும் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி மௌனமே சாதித்தது.

1987 ஒக்ரோபர் பத்தாம் திகதி இந்திய இராணுவம் தமிழர் தாயகத்தில் ஆரம்பித்த கொடூரத் தாக்குதலும், இதனால் ஆரம்பமான இந்தியப் படைகள் - விடுதலைப் புலிகள் மோதலும் ஜே. ஆர். விரும்பிய அல்லது எதிர்பார்த்த



மாற்றங்களுக்குச் சாதகமாக அமைந்தது.

இறுதியில், 1988 செப்டம்பர் 2 - 8ஆம் திகதிகளில் ஜே.ஆர். பிரகடனம் செய்த வடக்கு கிழக்கு தற்காலிக இணைப்பின் அடிப்படையில், வடகிழக்கு மாகாண சபைக்கான தேர்தல் 1988 நவம்பர் 19இல் இடம்பெற்றது. இந்தியாவின் துணைக்குழுவாக இயங்கிய ஈ.பி.ஆர்.எல்.எவ்வை இந்திய இராணுவம் இத்தேர்லில் வெற்றிபெற வைத்தது. இதன் பின்னரும் சர்வஜன வாக்கெடுப்பை நடத்தி இரண்டையும் இணைக்கும் நட வடிக்கைகளை ஜே.ஆர். மேற்கொள்ள வில்லை.

ஜே.ஆரின் பதவிக்காலம் முடிய, ரணசிங்க பிரேமதாச ஜனாதிபதியானார். ஆரம்பத்திலிருந்தே இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை எதிர்த்து வந்த இவர், இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்தை 1990 மார்ச் முழுமையாக வெளியேற்ற, வடக்கு - கிழக்கு மாகாண சபையின் ஆயுட்காலமும் முடிவடைந்தது. ஈ.பி.ஆர்.எல்.எவ். முதலமைச்சராகவிருந்த வரதராஜப் பெருமாளும் இந்தியப் படைகளுடன் சேர்ந்து கப்பலேற, மாகாண சபையும் அதிகாரபூர்வமாகக் கலைக்கப்பட்டது.

ஆனால், சிங்களப் பகுதிகளில் மற்றைய ஏழு மாகாண சபைகளும் தொடர்ந்து இயங்கின. வடக்கையும் கிழக்கையும் இணைக்கும் சர்வஜன வாக்கெடுப்பு வெறும் அறிவிப்பாகவே காலவரையறையின்றி அமைந்தது. இது ஜே.வி.பி. யினருக்கு வாய்ப்பாகிப் போனது. வடக்கும் - கிழக்கும் இணைந்த நிலப்பரப்பு இலங்கையின் மூன்றில் ஒன்றாக இருப்பதை சுட்டிக் காட்டிய ஜே.வி.பி., இரண்டையும் இணைக்கும் சர்வஜன வாக்கெடுப்பு சட்டத்துக்கு முரணானது என்று வாதிட்டது.

அத்துடன் இதற்கு எதிராக மூன்று மனுக்களை 2006 ஜூலை 14ஆம் திகதி உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்தது. அன்று உச்சநீதிமன்ற பிரதம நீதியரசராகவிருந்த சரத் என்.சில்வா, ஜே.ஆர். முன்னர் பிரகடனம் செய்த தற்காலிக இணைப்பு உத்தரவு செல்லுபடியற்றதென தீர்ப்பளித்து அதனை ரத்துச் செய்தார். அத்துடன் வடக்கு - கிழக்கு இணைப்பும், சர்வஜன வாக்கெடுப்பும் முற்றுப்பெற்றது.

இதனையிட்டு இந்தியா எந்தக் கருத்தையும் வெளியிடவில்லை. தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியும் அப்படியே. அன்றிலிருந்து கொழும்பின் நேரடி நிர்வாகத்திலிருந்த வடமாகாண சபைக்கான தேர்தல் 2013ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 21ஆம் திகதி நடத்தப்பட்டது.

ஐந்தாண்டுகள் இயங்கிய இந்த மாகாண சபைக்கு காணி அதி காரமும், காவற்துறை அதிகாரமும் கிடையாதென மாறி மாறி ஆட்சிக்கு வந்த சிங்கள அரசுகள் கூறிவிட்டன. இந்த விடயத்தில்கூட இந்தியா ஒரு போதும் வாய் திறக்கவில்லை.

ஒப்பந்தத்தின் பிரகாரம் பதின்மூன்றாவது திருத்தத்தின் கீழ் நிறுவப்பட்ட மாகாண சபைக்கு ஏற்றுக் கொள்ளப்பட்ட அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டுமென இலங்கையிடம் இந்தியா வலியுறுத்தவும் இல்லை. இதனை கேட்கப்போக, நேரடியாக இது கிடையாது என்று இலங்கை சொல்லுமானால், அடுத்து என்ன செய்வது என்று தெரியாத கையறு நிலையில் இந்தியா இருப்பது தெரிகிறது.

இதற்கிடையில், கிடைத்த அதிகாரங்களை பயன்படுத்த முடியாதிருந்த தமிழரசுக் கட்சியை தலைமையாகக் கொண்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர், தாங்களே அழைத்து வந்து கதிரையில் ஏற்றிய முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கெதிராக தாங்களே நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்து பதவியிறக்க எடுத்த முயற்சியால் வடமாகாண சபை அல்லோலகல்லோலப்பட்டது.

2018ஆம் ஆண்டில் ஒருவாறு முழுமையாகப் பதவிக்காலத்தை முடித்த மாகாண சபைக்கு, அதற்குப்பின்னர் இன்னமும் தேர்தல் நடைபெறவில்லை. இப்பொழுதும் ஆளுனர் ஆட்சியே நடைபெறுகிறது.

தமிழர் தாயகத்தில் அரசியல் - பண்பாட்டு மையமாகத் திகழும் வடமாகாண சபைக்கு முதன்முறையாக தமிழ் தெரியாத சிங்களவர் ஒருவர் இந்த ஆண்டு நடுப்பகுதியில் பிரதம செயலாளராக நியமிக்கப்பட்டார்.

(9ஆம் பக்கம் பார்க்க...)

# ஜனநாயக மாநாட்டில் சீனாவின் அறிவிப்பு

பாஸ்கரன் கிருஷ்ணமூர்த்தி



அமெரிக்கா முன் நின்று ஏற்பாடு செய்த 'ஜனநாயக மாநாடு' வெற்றிகரமாக நடந்து முடிந்துள்ளது.

இந்த இரண்டு நாள் (டிசெ 9-10) மாநாட்டில் இந்தியப் பிரதமர் மோடி, "ஜனநாயகம் - ஒரு விபத்தினால் நிகழ்வது அல்ல ஜனநாயகத்தைப் பாதுகாக்க வேண்டும் அதற்காகப் போராட வேண்டும் அதனை (தொடர்ந்து) புதுப்பித்தாக வேண்டும்" என பேசினார். மாலைதீவு அதிபர் இப்ரஹிம் மொகமது சோலி முதல் ('எமது நாட்டில் ஜனநாயகம் இப்போதைக்கு தொட்டில் குழந்தையாக இருக்கிறது வளர்த்து எடுக்கிற முயற்சியில் தீவிரமாக இருக்கிறோம்') நியுசிலாந்து பிரதமர் ஜெசிண்டா ஆர்டன் வரை ('அனைத்து முனைகளிலும், உலகின் ஆகச் சிறந்த ஜனநாயகமாக தொடர்ந்து முன்னேறி வருகிறோம்') பல உலகத் தலைவர்கள் காணொலி மூலம் கலந்து கொண்டு உரையாற்றி இருக்கிறார்கள்.

**இந்த மாநாட்டுக்கான அவசியம் என்ன..?**

'ஃப்ரீடம் ஹவுஸ்' அமைப்பு வெளியிட்ட 'உலகில் சுதந்திரம் 2021' அறிக்கையின்படி, 2005 இல் இருந்து 2020 வரையிலான 15 ஆண்டுகளில், சுதந்திரமற்ற நாடுகளின் எண்ணிக்கை, 45 இல் இருந்து 54 ஆக உயர்ந்து இருக்கிறது. 'ஓரளவு சுதந்திரம்' உள்ள நாடுகள் 58 இல் இருந்து 59 ஆகி இருக்கிறது. அதாவது கடந்த 15 ஆண்டுகளில், 10 நாடுகளில் மக்களின் சுதந்திரம் பறி போயிருக்கிறது.

இந்தப் பின்னணியில்தான், சார்பு நிலையற்ற நீதியம், நடுநிலையான துணிச்சல் மிக்க ஊடகங்கள் உள்ளிட்ட வலுவான ஜனநாயக அமைப்புகள், சம உரிமை நல்கும் சட்ட நடைமுறைகள், குடிமக்களின் குரலைப் பிரதிபலிக்கும் சமூகக் கூட்டமைப்புகள், ஊழலற்ற வெளிப்படையான அரசு நிர்வாகம் ஆகியன சேர்ந்த ஆரோக்கியமான ஜனநாயக அரசியலுக்கு ஆதரவாக நல்ல ஆலோசனைகள், திட்டங்கள், வழிமுறைகளைப் பன்னாட்டுத் தலைவர்கள் வெளிப்படுத்தி உள்ளனர்.

எதிர்பார்த்தாற் போலவே, இந்த மாநாட்டை சீனா கடுமையாக எதிர்க்கிறது. 'தாராளமான ஜனநாயக அமைப்பு முறை' மக்களுக்கு நன்மை பயக்காது என்பது சீனாவின் வாதம்.

கடுமையான எதிர் பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக, மாநாட்டுக்கு ஒரு வாரம் முன்பாக சீன அரசு ஒரு வெள்ளை அறிக்கை வெளியிட்டது. 'உலகின் மிகப் பெரிய ஜனநாயக நடைமுறை கொண்ட நாடு' என்று தன்னைத் தானே கொண்டாடிக் கொண்டது. இதுதான் மிகப் பெரிய நகைச்சுவையாக பார்க்கப்படுகிறது.

அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியில் சீனாவின் அசாத்திய சாதனைகளை யாரும் மறுக்கவே இல்லை. கடந்த சில பத்தாண்டுகளில் சிறந்த திட்டமிடல், கடுமையான உழைப்பு மற்றும் திறமையான நிர்வாகம் மூலம் மிக வலுவான நாடாக தன்னை உயர்த்திக் கொண்டுள்ளது.

இதிலும் இரு வேறு கருத்துக்கு இடமில்லை. ஆனால் தன்னை ஒரு ஜனநாயக நாடாகவும் மனித உரிமைகளின் பாதுகாவலன் ஆகவும் சீனா கூறிக் கொள்வதைத் தான் சர்வதேச சமூகம் ஏளனமாகப் பார்க்கிறது.

தனது நாட்டில், 2016, 2017 ஆம் ஆண்டுகளில் 90 கோடிக்கு மேற்பட்டோர் பங்கு பெற்ற 'தேர்தல்' நடந்ததாக சீன அரசு கூறுகிறது. ஆனால், உயர் மட்ட, அடிமட்ட 'காங்கிரஸ்', சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் 'இறப்பர் ஸ்டாம்ப்' அமைப்புகளாக மட்டுமே செயல்பட முடியும் என்பதையும், 'ஜனாதிபதி', பிரத மர்' பதவிகளுக்கு ஒரு நபர் மட்டுமே போட்டியிடுகிற விந்தை பற்றியும் வெள்ளை அறிக்கையில் எதுவும் குறிப்பிடாதது ஏன்? என்று சர்வதேச ஊடகங்கள் கேள்வி எழுப்புகின்றன.

1989 ஜூன் 4 (மே 35) தியானன் மென் சதுக்கப் போராட்டத்தில், ஜனநாயக உரிமைகள் கோரி போராடிய தனது நாட்டுக் குடிமகன்கள் மீது சீன அரசு நடத்திய கொடூரத் தாக்குதல் தொடங்கி, தற்போது சில நாட்களாக ஹொங்கொங் நகரில் நிகழ்ந்து வரும் ஜனநாயக விரோத சம்பவங்கள் வரை எதுவுமே சர்வதேச அரங்கில் சீனாவுக்குப் பெருமை சேர்ப்பதாக இல்லை.

கொரோனா நோய்த் தொற்று குறித்து முதலில் அறிவித்த ஆய்வக விஞ்ஞானி முதல் மிகப் பெரும் வணிக நிறுவன உரிமையாளர், உலகப் புகழ் பெற்ற விளையாட்டு வீராங்கனை வரை, சீன அரசுக்கு எதிராகப் பேசுகிற பலர் அவ்வப்போது காணாமல் போகிற சம்பவங்களும் தொடர் கதையாகி வருகின்றன.

இத்துடன், தான் வழங்கிய நிதியுதவியின் மீது அநியாய வட்டி விதிப்பது, ஏற்றுக்கொள்ள இயலாத நிபந்தனைகளுக்கு உட்படுத்துவது உள்ளிட்ட மிரட்டல் நடவடிக்கைகள் குறித்து சீனாவின் நட்பு நாடுகளுமே கூடப் புகார் தெரிவித்து வருகின்றன. அவுஸ்திரேலியா, இலங்கை, பாகிஸ்தான் உள்ளிட்ட பல நாடுகளில் மக்கள், சீனாவின் பொருளாதார ஆக்கிரமிப்பு குறித்த தனது எதிர்ப்பு, மனத்தாங்கலைப் பல்வேறு போராட்டங்களின் மூலம் வெளிப்படையாகவே பல முறை பதிவு செய்துள்ளனர்.

திபெத், தைவான், ஹொங்கொங், தென் சீனக் கடல். இந்தியாவின் அருணாச்சலப் பிரதேசம் உள்ளிட்ட பகுதிகளின் மீது சீனாவின் அணுகுமுறை தொடர்ந்து சர்வதேச அமைதிக்குக் குந்தகம் விளைவிப்பதாகவே அமைந்து உள்ளன.

உலகின் பல நாடுகளில், பல பகுதிகளில் தனது சொந்த நாட்டுக்குத் திரும்ப முடியாமல் அச்சத்துடன் வாழ்கிற, விடுதலை உணர்வு கொண்ட சீனப் பிரமுகர்கள் எத்தனை பேர்..? இந்தப் பட்டியல் நாளுக்கு நாள் நீண்டு கொண்டே போகிறது.

இத்தகைய சூழலில் தனது போக்கைச் சற்றும் மாற்றிக் கொள்ள முன்வராத சீன அரசு, உலக ஜனநாயக மாநாட்டைக் கடுமையாக எதிர்க்கிறது. முழு இறையாண்மை கொண்ட நாடாக சீனாவுக்கு மிக நிச்சயமாக இதற்கான உரிமை இருக்கிறது. ஆனால், இந்தியா உள்ளிட்ட பிற ஜனநாயகக் குடியரசு நாடுகளின் செயல்பாடுகளைக் குறைகூறவோ, அது குறித்து கிண்டல் செய்யவோ எந்தத் தார்மீக உரிமையும் இல்லை என இந்திய ஊடகங்கள் விமர்சனம் செய்துள்ளன.

மற்றபடி, தானே உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடு என்ற சீன அரசின் வெள்ளை அறிக்கை அறிவிப்பு, இந்த நூற்றாண்டின் மிகச் சிறந்த அவல நகைச்சுவை அன்றி வேறில்லை. ஒப்புக் கொள்வோம் - இதற்கும் கூட சீனாவுக்கு 'ஜனநாயக உரிமை' இருக்கிறது. ■

> **“ அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியில் சீனாவின் அசாத்திய சாதனைகளை யாரும் மறுக்கவே இல்லை. கடந்த சில பத்தாண்டுகளில் சிறந்த திட்டமிடல், கடுமையான உழைப்பு மற்றும் திறமையான நிர்வாகம் மூலம் மிக வலுவான நாடாக தன்னை உயர்த்திக் கொண்டுள்ளது.**

# இலங்கையின் மாகாண சபையும்

(8ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இந்த மாதத்தில் கிழக்கு மாகாணசபைக்கும் சிங்களவர் ஒருவரே பிரதம செயலாளராக நியமனமாகியுள்ளார். வடக்கு மாகாண சபையின் ஆளுனராக தமிழ் தெரியாத தமிழரும், கிழக்கு மாகாண சபையின் ஆளுனராக தமிழ் தெரியாத சிங்களவரும் பதின்மூன்றாவது திருத்தத்தின் கீழ் பணியாற்றுவது விண்ணாணம்தான்.

தமிழருக்கான அதிகாரப் பகிர்வுகளுக்கென 1987ல் செய்யப்பட்ட இரு நாட்டு ஒப்பந்தத்தின் கீழ் ஐந்து ஆண்டுகள் மட்டுமே வடக்கில் தனியான மாகாண சபை இயங்கியுள்ளதென்றால், இந்தியாவால் எதனை இலங்கையிடமிருந்து பெற்றுத்தர முடியும்? முழுமையான அதிகாரங்களுடன் மாகாண சபை நிர்வாகத்தை உருவாக்குவதே இந்தியாவின் இலட்சியமென்று எவ்வளவு காலத்துக்கு கூறிக்கொண்டிருக்க முடியும்?

இனி இப்பத்தியின் ஆரம்பத்தில் குறிப்பிட்ட நண்பர் எழுப்பிய கேள்வியான - சம்பந்தனை யாராவது மிரட்டினரா? - என்பதற்கு பதில் காண முனைவது பொருத்தம்.

நல்லாட்சிக் காலத்தில் ரணில் விக்கிரமசிங்கவை பகைத்துவிடக் கூடாது என்பதற்காக இந்தியப் பிரதமரை சந்திக்க முனையாத, ஒரு கடிதம் கூட இந்திய அரசுக்கு எழுதாத சம்பந்தன் - இப்போது ராஜபக்ஷக்களை பகைக்க விரும்பாது - அவர்கள் வழங்கிய இலவச பங்களாவை இழக்க விரும்பாது இந்திய பயணத்தை முடக்க விரும்புகிறாரா? அல்லது, அண்மையில அமெரிக்க பயணம் மேற்கொண்ட லெப்ரினன்ட் வழங்கிய ஆலோசனையா? இல்லையென்றால் தமிழரசுத் தலைவர் மாவையின் மீது மிளகாய் அரைக்கும் முயற்சியா?

இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் பிதாமகர்களான ஜே.ஆரும், ராஜீவும் இன்றில்லை. ஒப்பந்தத்தை முழுமையாக எதிர்த்த பிரேமதாசவும் அத்துலத்முதலியும்கூட இன்றில்லை.

ஏட்டுச் சுரைக்காயாகவிருக்கும் மாகாண ஆட்சிக்கு முடிவு கட்ட கோட்டாபய அரசு புதிய அரசியலமைப்பைக் கொண்டு வருவது சம்பந்தனுக்கு நன்றாகவே தெரியும். இதற்குப் பிறகு இந்தியா போனாலென்ன, போகாவிட்டாலென்ன? மோடியைச் சந்தித்துத்தான் என்ன நடைபெறப் போகிறது? சொந்த வீட்டைப் பேண முடியவில்லை. இதற்கும் மேல்.....

சம்பந்தன் என்னத்தை எண்ணி காய்களை நகர்த்துகிறாரோ - அது அவருக்குத் தெரிந்தாலாவது போதும். ■

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை
வி னாத்தான்
நேரம் : 1 மணித்தியாலம்

20. சந்தையில் மரக்கறி வியாபாரி ஒருவர் தனது வாடிக்கையாளரிற்கு பூசனிக்காயைக் கொடுப்பதற்காக ஒரு பூசனிக்காயை தராசின் ஒரு தட்டில் வைத்து மறுதட்டில் 2 கிலோகிராம் படிக்கல்லை வைத்தார். மேலும் பூசனிக்காய் உள்ள தட்டில் சில படிக்கற்களை வைத்தபோது தராசு சமநிலையில் காணப்பட்டது. பூசனிக்காயின் நிறை 1 கிலோகிராம் 625 கிராம் எனின் வியாபாரி பூசனிக்காய் உள்ள தட்டில் வைத்த படிக்கற்கள் எவை?

(1) 200g, 100g, 70g, 5g (2) 300g, 40g, 30g, 5g (3) 200g, 100g, 50g, 20g, 5g

● திங்கள் தொடக்கம் ஞாயிறு வரை P, Q, R, S, T, U, V ஆகிய ஊழியர்கள் வாரத்தின் ஏழு நாட்களும் கடமைக்குச் செல்லும் ஒழுங்குமுறை கீழே தரப்பட்டுள்ளது.

- வாரத்தின் நடு நாளில் P என்பவர் கடமைக்குச் செல்கிறார்.
- U, S, V ஆகியோர் ஒழுங்கு முறையில் மூன்று நாட்களும் கடமைக்குச் செல்கின்றனர்.
- V மற்றும் R ஆகியோர் கடமைக்குச் செல்லும் நாட்கள் இரண்டிற்கும் இடையே இன்னொருவர் மட்டும் வேலைக்குச் செல்கிறார்.
- Q சனிக்கிழமை கடமைக்குச் செல்கிறார்.

21. S, T ஆகியோர் கடைக்கு வரும் நாட்கள் முறையே


(1) செவ்வாய், ஞாயிறு (2) திங்கள், ஞாயிறு (3) வியாழன், புதன்

22. T கடமைக்கு வந்து அடுத்து மூன்று நாட்களும் கடமைக்கு வரக் கூடியவர்கள் யாவர்?


(1) U, S, F (2) S, R, U (3) U, S, V


23. ஒரு வாங்கில் இடமிருந்து வலமாக முறையே அண்ணா, அம்மா, அப்பா, தங்கை நான் அமர்ந்திருந்தோம். முதலில் நானும் அப்பாவும் எங்கள் இடங்களைப் பரிமாற்றம் செய்தோம். பின்பு அண்ணாவும் அப்பாவும் தங்கள் இடங்களைப் பரிமாற்றம் செய்தார்கள். மீண்டும் நானும் அப்பாவும் எங்கள் இடங்களைப் பரிமாற்றம் செய்தோம். இப்போது வாங்கின் நடுவில் இருப்பது யார்?


(1) நான் (2) அப்பா (3) அண்ணா

24. 

இங்கு காட்டப்பட்டுள்ள அட்டைத்தாளை மடித்து ஒரு பெட்டியைச் செய்யும் போது அது தோன்றும் விதத்தினைக் காட்டும் சரியான விடையினைத் தெரிவு செய்க.


(1)


(2)


(3)


25. 6 பேர் 8 நாட்களில் கிணறு ஒன்றை வெட்டி முடிக்கலாம். அவர்கள் 6 பேரும் மூன்று நாட்கள் வேலை செய்து முடித்தபின் அவர்களில் ஒருவர் சுகயீனம் காரணமாக வேலைக்கு வரவில்லை. எனின் மீதி வேலையை 5 பேர் சேர்ந்து எத்தனை நாட்களில் செய்து முடிப்பர்?

(1) 5 நாட்களில் (2) 7 நாட்களில் (3) 6 நாட்களில்

26. குமாரின் பிறந்ததின கொண்டாட்டத்தில் கலந்து கொண்ட 65 பேர்களிடையே 47 பேர் பரிசுப்பொதியுடனும் 26 பேர் பூச்செண்டுடனும் காணப்பட்டனர். அவர்களில் சிலர் இரண்டையும் வைத்திருந்தனர். 8 பேரிடம் இவை எதுவும் காணப்படவில்லை. எனின் கலந்து கொண்டவர்களில் பரிசுப்பொதி மற்றும் பூச்செண்டு ஆகிய இரண்டையும் வைத்திருந்தவர்களின் எண்ணிக்கை யாது?

(1) 16 (2) 8 (3) 12

● **தரப்பட்ட தரவைப் பயன்படுத்தி 27, 28 ஆகிய வினாக்களுக்குரிய விடையைத் தெரிக.**




ஐங்கோணி வடிவமுள்ள பெட்டியொன்று மணிக்கூட்டுத் திசையில் சுழலுகின்றது. முன்பக்க முகப்பில் காட்டப்பட்ட இலக்கத்திற்குச் சமமான செக்கன்கள் கடந்த பின்னர் அதற்கடுத்த முகம் முன்பக்கத்திற்கு வரும்.


27. 10 செக்கன்களின் பின் முன்பக்க முகப்பில் காணப்படும் இலக்கம் எது?

(1) **v** (2) **iv** (3) **i**

28. முன்பக்கம் தென்படும் முகப்பு சுழன்று மீண்டும் அதே இலக்கமுடைய முகப்புத் தென்பட எவ்வளவு நேரம் தேவைப்படும்?

(1) 21 செக்கன்கள் (2) 15 செக்கன்கள் (3) 12 செக்கன்கள்

## விடைகள்

| | | |
|---|---|---|
| **20.** | (3) | 200g, 100g, 50g, 20g, 5g |
| **21.** | (1) | செவ்வாய், ஞாயிறு |
| **22.** | (3) | U, S, V |
| **23.** | (2) | அப்பா |
| **24.** | (2) |  |
| **25.** | (3) | 6 நாட்களில் |
| **26.** | (1) | 16 |
| **27.** | (1) | **v** |
| **28.** | (2) | 15 செக்கன்களை |

# 225 எம்.பிக்களையும் கொல்ல வேண்டும்!

## இதுவே மக்களின் தற்போதைய நிலைப்பாடு என்கிறார் டிலான்



கொழும்பு, டிசெ. 13

**“நாட்டில் மக்களுக்கு அரசியல் வெறுத்துவிட்டது. அன்று பாராளு மன்றத்துக்கு வெடிகுண்டு தாக்குதல் நடத்தப்பட்டபோது எதிர்த்த மக்கள் இன்று ஏன் பாராளுமன்றத்துக்கு குண்டுத்தாக்குதல் நடத்த வில்லை எனக் கேட்கும் நிலை உருவாக்கியுள்ளது.**

இதனால் தேர்தலால் தெரிவு செய்யப்படாத அதிகார வர்க்கத்துக்கு நாட்டைக் கொடுப்போம் என்ற மனநிலைக்கு மக்கள் தள்ளப்படுவார்கள். அதனால் மக்களை, தேர்தலைச் சந்திக்காத தரப்பினரால் அரசை அமைக்கும் சூழல் உருவாகலாம்.”

- இவ்வாறு அரச தரப்பு எம்.பியான டிலான் பெரேரா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: -

“ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எதிர்பார்த்த பொறிமுறை மாற்றம் இன்று இடம்பெற்றுள்ளது. இன்று பிரதான எதிர்க்கட்சியினர் ஏன் ஜனவாதத்துக்கு எதிராகப் பேசுகின்றனர். ஆனால், வடக்கு - கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் மக்கள் பிரதிநிதிகளை உரையாற்றக்கூட அனுமதிக்காத எதிர்க்கட்சி சட்ட ஆட்சி பற்றிப் பேசுகின்றது. நீதியின் சுயாதீனம் பற்றிப் பேசும் இவர்கள் ஆட்சியில் நீதித்துறையை கையில் எடுத்துச் செய்த செயற்பாடுகள் என்னவென்பது எமக்கும் தெரியும். அவ்வாறான நிலையில் இருந்து ஜனாதிபதி நாட்டை மாற்றியுள்ளார்.

இன்று நாட்டில் பொது மக்களுக்கு அரசியல் வெறுத்து விட்டது. அன்று பாராளுமன்றத்துக்கு வெடிகுண்டு தாக்குதல் நடத்தப்பட்ட வேளையில் எதிர்த்த மக்கள் இன்று ஏன் பாராளுமன்றத்துக்குக் குண்டுத் தாக்குதல் நடத்தவில்லை எனக் கேட்கும் நிலை உருவாக்கியுள்ளது.

225 எம்.பிக்களையும் கொல்ல வேண்டும் என்றே மக்கள் கூறுகின்றனர். இப்போது முகங்கொடுக்கும் கொரோனா நிலைமைகளுடன் அடுத்த சவால்களை மக்கள் முகங்கொடுக்கும் வேளையில் மக்களுக்கு அரசியல் வெறுக்கப்படும். இந்தியாவில் சில பிராந்தியங்களில் உள்ளது போன்று அதிகாரவாதம் இலங்கையிலும் உருவாகும் நிலை ஏற்படும்.

இலங்கையில் இன்றும் இந்த அதிகாரவாதம் வெளிப்படுகின்றது. இராணுவத்தின் அதிகாரிகளின் மூலமாக உருவாகும் அதிகாரவாதத்தை மட்டும் நான் கூறவில்லை. அதையும் தாண்டிய ஒட்டு மொத்த அதிகாரவாதமும் தலைதூக்கும்.

ஏனென்றால், மக்களுக்கு அரசியல்வாதிகளை விட அதிகாரவர்க்கம் நல்லதென்ற நிலைமை உருவாகும். தேர்தலால் தெரிவு செய்யப்படாத அதிகார வர்க்கத்திடம் நாட்டைக் கொடுப்போம் என்ற மனநிலைக்கு மக்களே தள்ளப்படுவார்கள். அதனால் மக்களை, தேர்தலைச் சந்திக்காத தரப்பினரால் அரசை அமைக்கும் சூழல் உருவாகலாம். அதற்கு அரசியல்வாதிகளின் பிரிவினை செயற்பாடுகளே காரணமாக இருக்கும்.

நான் பாராளுமன்றத்தை 27 வருடங்களாகப் பிரதிநிதித்து வப்படுத்து கின்றேன். எனினும், இந்த அரசியல்வாதிகளின் பிரிவினை செயல்பாடுகளில் மாற்றங்கள் ஏற்படவில்லையானால் அடுத்த முறை நான் இந்தச் சபையை பிரதிநிதித்துவப் படுத்த மாட்டேன்” - என்றார். (இ)

## இலங்கை மீனவர்கள் விரைவில் விடுதலை

கொழும்பு, டிசெ. 13

கைதான இலங்கை மீனவர்கள் நால்வர் எதிர்வரும் 14ஆம் திகதி விடுதலை செய்யப்படவுள்ளனர்.

கடந்த செப்டம்பர் மாதம் வாழைச்சேனையில் இருந்து கடலுக்குச் சென்ற 4 கடற்றொழிலாளர்கள் காணாமல் போயிருந்த நிலையில், இந்திய கடற்படையினரால் கடந்த நவம்பர் மாதம் 26 ஆம் திகதி மீட்கப்பட்டு தற்போது சென்னையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தொடர்ச்சியாக மேற்கொண்ட முயற்சிகளையடுத்து இந்திய சட்ட ஏற்பாடுகளின் அடிப்படையில் எதிர்வரும் 14 ஆம் திகதி இவர்கள் விடுதலை செய்யப்படவுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

குறித்த நான்கு மீனவர்களையும் அவர்களின் படகையும் நாட்டுக்குக் கொண்டு வருவதற்கான ஏற்பாடுகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட படகின் உரிமையார்கள் மற்றும் சம்பந்தப்பட்ட கடற்றொழிலாளர்களின் உறவினர்கள் அமைச்சர் டக் ளஸ் தேவானந்தாவைச் சந்தித் துக் கலந்துரையாடியுள்ளனர். (இ)

## ஆளுநர் தலைமையில் நாளை ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 13

வடக்கு மாகாண ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தலைமையில் யாழ்., கைதடியில் உள்ள வடக்கு மாகாண பேரவைச் செயலகத்தில் இந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் காலதாமதம் அடையும் நிலைமையில் இந்த ஏற்பாட்டை ஆளுநர் மேற்கொண்டுள்ளார்.

இந்தக் கூட்டத்துக்கு வடக்கு மாகாண மக்கள் பிரதிநிதிகள், நிர்வாக அதிகாரிகள்



எனப் பலரும் அழைக்கப்பட்டுள்ளதால் பெரும் எதிர்பார்ப்பு நிலவுகின்றது.

மேற்படி கூட்டம் கடந்த 10ஆம் திகதி இடம்பெற ஏற்பாடு செய்யப்பட்டு நாடாளுமன்றத்தில் வரவு - செலவுத் திட்ட இறுதி வாக்கெடுப்பு காரணமாக பிற்போடப்பட்டது. (இ-5)

## ரயிலில் மோதி பெண் மரணம்

கொழும்பு, டிசெ. 13

ரயில் கடவையில் பெண் ஒருவர் ரயிலில் மோதி உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் களுத்துறை, பயாகல - எலகஹவத்தை பகுதியில் இடம்பெற்றுள்ளது.

காலி நோக்கிப் பயணித்த ரயிலுடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரில் பெண் உயிரிழந்தார்.

உயிரிழந்த பெண் பயாகல பிரதேசத்தைச் சேர்ந்த 26 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

விபத்தில் காயமடைந்த மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் நாகொடை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.(இ)



## பொரளை கொள்ளைச் சம்பவம்: சந்தேகநபர்களுக்கு வலைவீச்சு!

கொழும்பு, டிசெ. 13

பொரளைப் பகுதியில் உள்ள நகையகம் ஒன்றில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்களை அடையாளம் காண்பதற்காக, அவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிளின் இலக்கத் தகடை அடிப்படையாகக் கொண்டு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்தப் பகுதியிலுள்ள சி.சி.ரி.வி. காணொலி காட்சிகளை ஆராய்ந்து, விசாரணைகளை முன்னெடுப்பதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

எவ்வாறிருப்பினும், சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் இதுவரையில் கைதுசெய்யப்படவில்லை.

பொரளைப் பகுதியில், நேற்றுமுன்தினம் முகத்தை மூடியவாறு மோட்டார் சைக்கிளில் பிரவேசித்த இருவர், வானத்தை நோக்கி துப்பாக்கிச்சூடு நடத்திவிட்டு, நகையகம் ஒன்றில் கொள்ளையிட்டுத் தப்பிச் சென்றனர். இதன்போது, சுமார் 25 இலட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் கொள்ளையிடப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## தமிழ் - சிங்களப் புத்தாண்டுக்குள் மரக்கறி தட்டுப்பாடு அதிகரிக்கும்

### வியாபாரிகள் எச்சரிக்கை

கொழும்பு, டிசெ. 13

எதிர்வரும் தமிழ், சிங்களப் புத்தாண்டுக்குள் நாட்டில் மரக்கறி தட்டுப்பாடு மேலும் அதிகரிக்கும் என மரக்கறி வியாபாரிகள் எச்சரிக்கின்றனர்.

நாட்டில் தற்போது நிலவும் மரக்கறி வகைகளுக்கான தட்டுப்பாடு நீடிக்குமானால் தமிழ், சிங்கள புத்தாண்டு காலத்தில் மேலும் நெருக்கடியைச் சந்திக்க நேரிடும் என வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

தற்போது மரக்கறிகளின் மொத்த விலை 300 ரூபாயிலிருந்து அதிகரித்து இருப்பதாகவும் வியாபாரிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதன் காரணமாக தமக்கு வியாபாரத்தை எடுத்துச் செல்ல முடியாது உள்ளதாகவும் அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

உரப் பற்றாக்குறை காரணமாக விவசாயிகள் மரக்கறி உற்பத்தியை நிறுத்தியுள்ளதால் எதிர்காலத்தில் சந்தையில் மரக்கறிகளை விற்பனை செய்வது மிகவும் கடினம் எனவும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்

இதேவேளை, சந்தையில் மீண்டும் பால் மாவுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது எனவும் நுகர்வோர் விசனம் தெரிவிக்கின்றனர். (இ)

## 1,735 பேருக்கு எச்சரிக்கை

கொழும்பு, டிசெ. 13

மேல் மாகாணத்தில் தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய 1,735 பேருக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.


மேல் மாகாணத்தில் தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறுவோரைக் கண்காணிக்கும் நடவடிக்கை தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில், 800 பொலிஸார் இணைந்து விசேட சோதனை நடவடிக்கைகளை நேற்றுமுன்தினம் மேற்கொண்டுள்ளனர்.

இதன்போது 2 ஆயிரத்து 920 மோட்டார் சைக்கிள்களும், 2 ஆயிரத்து 581 ஓட்டோக்களும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன் 7 ஆயிரத்து 765 பேர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். இவர்களில் தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய 1,735 பேர் எச்சரிக்கப்பட்டுள்ளனர். (இ)

# உக்ரைனை ஆக்கிரமித்தால் கடும் விளைவுகள் நேரிடும்!

## ரஷ்யாவுக்கு அமெரிக்கா எச்சரிக்கை



வாஷிங்டன், டிசெ. 13

உக்ரைனை ஆக்கிரமித்தால் அதற்காக ரஷ்யா கடும் விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும். பொருளாதார ரீதியில் கடும் நெருக்கடிகளை சந்திக்க வேண்டி வரும் என்று ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினிடம் தெரிவித்ததாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்தார்.

வாஷிங்டனில் நேற்று சனிக்கிழமை செய்தியாளர்களிடம் பேசிய அவர், உக்ரைனை ஆக்கிரமிக்க முயன்றால் ரஷ்யா தொடர்பான உலகின் நிலைப்பாடு மாற்றமடையும் என புடினிடம் தொலைபேசியில் பேசும்போது தெளிவுபடுத்தியதாக குறிப்பிட்டார்.

இதேவேளை, சனிக்கிழமை லிவர்பூலில் நடந்த கூட்டத்திற்குப் பின்னர் ஜி-07 நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களும் உக்ரைன் விவகாரம் தொடர்பில் ரஷ்யாவை எச்சரிக்கும் வகையில் செய்தியை அனுப்பியுள்ளனர்.

ரஷ்யாவின் எந்தவோர் ஆக்கிரமிப்பு முயற்சியும் கடும் விளைவுகளை ஏற்படுத்தும். மோசமான சூழலுக்கு வழிவகுக்கும் எனவும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே தங்கள் நாட்டு எல்லை அருகே ரஷ்யா 94,000 படையினரை தற்போது குவித்துள்ளதாக உக்ரைன் பாதுகாப்புத் துறை அமைச்சர் ஒலெக்ஸி ரெஸ்னிகோவ் தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவால் இணைத்துக்கொள்ளப்பட்ட கிரீமியா தீபகற்பம் அருகே ஏராளமான ரஷ்ய இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளனர். நமது உளவுத் துறை தகவலின் படி, அவர்களின் எண்ணிக்கை 94,300ஆக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

ரஷ்யத் தரப்பிலிருந்து மோதல் தொடங்குவதற்கான சாத்தியக்கூறுகள் மிக அதிகமாக உள்ளன. குறிப்பாக, வரும் ஜனவரி மாத இறுதியில் இந்த மோதல் நிகழலாம். எனினும், இத்தகைய மோதலைத் தவிர்க்கவே உக்ரைன் விரும்புகிறது எனவும் உக்ரைன் பாதுகாப்புத் துறை அமைச்சர் ஒலெக்சி ரெஸ்னிகோவ் தெரிவித்தார்.

கடந்த 2013ஆம் ஆண்டு ரஷ்ய ஆதரவு பெற்ற அப்போதைய உக்ரைன் ஜனாதிபதி விக்டர் யானுகோவிச்சை எதிர்த்து, ஐரோப்பிய ஒன்றிய ஆதரவு பெற்ற எதிர்க்கட்சியினர் மாபெரும் போராட்டத்தில் ஈடுபட்டனர். அதையடுத்து அவர் ரஷ்யாவில் தஞ்சமடைந்தார்.

அதனைத் தொடர்ந்து அமைக்கப்பட்ட அரசை எதிர்த்து கிழக்கு மற்றும் தெற்குப் பகுதியைச் சேர்ந்த ரஷ்ய ஆதரவு கிளர்ச்சியாளர்கள் போரில் ஈடுபட்டனர். ரஷ்ய இராணுவ உதவியுடன் அவர்கள் கிழக்கு உக்ரைனின் டொனட்ஸ்க், லுஹான்ஸ்க் உள்ளிட்ட பகுதிகளை கைப்பற்றினர்.

இந்தச் சூழலில், உக்ரைன் எல்லையையொட்டி ரஷ்யா தனது படைகளைக் குவித்து வருவதாக அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் எச்சரித்துள்ளன.

எனினும், உக்ரைனை ஆக்கிரமிக்க தாங்கள் முயல்வதாக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை ரஷ்யா நிராகரித்துள்ளது.

# அமெரிக்காவை மிரட்டிய புயல்கள் 100இற்கும் மேற்பட்டோர் உயிரிழப்பு

வாஷிங்டன், டிசெ. 13

அமெரிக்காவை தொடர்ச்சியாக 30 புயல்கள் தாக்கியதில் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் பலியாகினர். சுமார் இரண்டரை கோடி பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கென்டகி மாகாணமே அதிக பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளது. அத்துடன், மிசோரி, ஆர்கன்சாஸ், இல்லினாய்ஸ், டென்னசி, மிசிமிசிப்பி ஆகிய மாகாணங்களும் பாதிக்கப்பட்டுள்ளன.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், சூறாவளியால் பேரழிவுக்குள்ளான நாட்டின் மத்திய பகுதிகளுக்கு அரசாங்கம் தன்னால் இயன்ற அனைத்தையும் செய்யும் என்று கூறியுள்ளார்.

மிகவும் பாதிக்கப்பட்ட மாநிலமான கென்டகிக்கு நிதியை விடுவித்து, கூட்டாட்சி அவசர கால பேரிடர் பிரகடனத்தில் பைடன் கையெழுத்திட்டுள்ளார்.



கென்டகியில் வெள்ளிக்கிழமை இரவு ஏற்பட்ட 30 வரையான புயல்கள் வீசியதில் 70 க்கும் மேற்பட்டோர் இறந்தனர், இதில் ஒரு மெழுகுவர்த்தி தொழிற்சாலையின் ஊழியர்கள் பலரும் அடங்குவர்.

மேலும், இறப்பு எண்ணிக்கை 100 க்கு மேல் உயரும் என்று கூறப்படுகிறது.

நேரடியாகத் தாக்கப்பட்ட மேஃபீல்ட் நகரில், தொழிற்சாலையின் இடிபாடுகளுக்குள் அவசரக் குழுக்கள் தேடுகின்றன. தொழிற்சாலையில் இருந்த 110 பேரில் 40இற்கும் மேற்பட்டோர் மீட்கப்பட்டுள்ளனர்.

புயலின் தாக்கம் காரணமாக மாநிலத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் மின்சாரம் மற்றும் தண்ணீர் இல்லாமல் பாதிக்கப்பட்டுள்ளனர். (ஐ)

# சன்னி இஸ்லாமிய அமைப்புக்கு சவுதி அரேபியா தடை விதித்தது!

ரியாத், டிசெ. 13

சன்னி இஸ்லாமிய அமைப்பான தப்லீக் ஜமாத் அமைப்புக்கு சவுதி அரேபிய அரசாங்கம் தடை விதித்துள்ளது.

தப்லீக் அமைப்பு பயங்கரவாதத்தின் வாயில்களில் ஒன்று எனவும் சமூகத்துக்கு ஆபத்தானது என்றும் சவுதி அரேபிய அரசாங்கம் கூறியுள்ளது. மேலும், தப்லீக் அமைப்புக்கு எதிராக மக்களை எச்சரிப்பதற்காக அடுத்த வெள்ளிக்கிழமை பிரசங்கம் செய்யுமாறு பள்ளிவாசல் போதகர்களுக்கு அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

இதுகுறித்து சவுதி அரேபியாவின் இஸ்லாமிய விவகாரத் துறை வெளியிட்டுள்ள ருவிட்டர் பதிவில், "சவுதி அரேபியாவில் தப்லீக் மற்றும் தாவா குழு உள்ளிட்ட பாகுபாடான குழுக்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

மசூதிகளின் போதகர்கள் மற்றும் வெள்ளிக்கிழமை தொழுகை நடத்தும் மசூதிகள் இந்த குழுக்களுக்கு எதிராக மக்களை எச்சரிக்க அடுத்த வெள்ளிக்கிழமை நேரம் ஒதுக்க வேண்டும்", என இஸ்லாமிய விவகார அமைச்சர் அப்துல் லத்தீப் அல் ஷேக் உத்தரவிட்டுள்ளார்.

தப்லீக் ஜமாத் அமைப்பு 1926இல் ஆங்கிலேயர் ஆட்சியில் இந்தியாவில் தொடங்கப்பட்டது. நம்பிக்கையை பரப்புவதற்கான சங்கம் என்பது இதன் பொருளாகும். ஆடை அணிதல், தனிப்பட்ட நடத்தை மற்றும் சடங்குகள் போன்றவற்றை மதரீதியாக கடைப்பிடிக்க வேண்டும் என முஸ்லிம்களை இந்த அமைப்பு வலியுறுத்துகிறது. உலகம் முழுவதிலும் இந்த அமைப்புக்கு சுமார் 40 கோடி உறுப்பினர்கள் இருக்கின்றனர் என்று கூறப்படுகிறது. (ஐ)

# ஜனநாயகத்தை அமெரிக்கா பேரழிவு ஆயுதமாக்கியுள்ளது

## குற்றஞ்சாட்டுகின்றது சீனா

பீஜிங், டிசெ. 13

ஜனநாயகத்தை பேரழிவு ஆயுதமாக அமெரிக்கா பயன்படுத்துவதாக சீனா குற்றம் சாட்டியுள்ளது.

100இற்கும் மேற்பட்ட நாடுகளை அழைத்து அமெரிக்கா ஜனநாயக மாநாடு நடத்தியுள்ளதைத் தொடர்ந்து சீனா இந்தக் குற்றச்சாட்டை சுமத்தியுள்ளது.

இதுகுறித்து அந்த நாட்டு வெளியுறவுத் துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஜனநாயகம் என்ற பெயரில் நாடுகளிடையே பகையை உண்டாக்குவதும் பிற நாடுகளோடு மோதுவதும் அமெரிக்காவின் பழக்கமாகும். இவ்வாறு செய்வது உலகை அழிவுப் பாதைக்குத்தான் இட்டுச் செல்லும், அதனால் எந்தப் பலனும் இல்லை.

நீண்ட காலமாகவே, பிற நாடுகளின் உள்விவகாரத்தில் அமெரிக்கா தலையிட்டு, தனது அரசியல் அமைப்பையும், நாகரிகத்தையும் திணித்து வருகிறது. 'ஜனநாயக சீர்திருத்தம்' என்ற பெயரில் பொருளாதார தடைகள் உள்ளிட்ட நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அவை மோசமான விளைவுகளை ஏற்படுத்தி வருகின்றன.

பிற நாடுகளின் உள்விவகாரங்களில் தலையிடுவதற்காக, ஜனநாயகத்தை அமெரிக்கா ஒரு பேரழிவு ஆயுதமாகப் பயன்படுத்துகிறது. ஜனநாயக மாநாட்டை நடத்தியுள்ளதன் மூலம், அந்த அரசியல் முறையை அமெரிக்கா ஒரு கருவியாக்கியுள்ளது என்று சீன வெளியுறவுத் துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. (ஐ)

# இந்திய பிரதமரின் ருவிட்டர் 'ஹக்கிங்'!



புதுடில்லி, டிசெ. 13

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் தனிப்பட்ட ருவிட்டர் கணக்கு நேற்று அதிகாலை ஹக்கிங் செய்யப்பட்டுள்ளது. எனினும், சிறிது நேரத்திற்குப் பிறகு கணக்கு மீட்கப்பட்டுள்ளது.

கணக்கு மீட்டமைக்கப்படுவதற்கு முன்பு, பிரதமர் மோடியின் ருவிட்டர் கணக்கில் இருந்து ஒரு பதிவு பதிவேற்றப்பட்ட பதிவில், "இந்தியா மின்னணுப் பணமான பிட்கொயினை சட்டபூர்வ நாணயமாக அதிகாரபூர்வமாக ஏற்றுக் கொண்டதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

அத்துடன், இந்திய அரசாங்கம் அதிகாரபூர்வமாக 500 பிட்கொயினை வாங்கி, நாட்டின் அனைத்து குடியிருப்பாளர்களுக்கும் விநியோகித்து வருவதாகவும் பதிவில் கூறப்பட்டிருந்தது.

தற்சமயம் கணக்கு மீட்டெடுக்கப்பட்ட நிலையில் மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் இந்திய கணனி அவசரநிலைப் பதிலளிப்புக் குழு (CERT-IN) ஹக்கிங் சம்பவத்தின் மூலத் தைக் கண்டறிய முயற்சித்து வருகிறது. (ஐ)

# டெல்டா வைரஸ் திரிபைவிட ஒமைக்ரோன் மோசமானதல்ல!

## தென்னாபிரிக்காவின் சிரேஷ்ட மருத்துவர்

கேப்டவுன், டிசெ. 13

ஒமைக்ரோன் திரிபு வைரஸ் டெல்டாவைவிட மோசமானதில்லை. ஒமைக்ரோன் தொற்றுக்குள்ளான பலர் மருத்துவமனையில் சிகிச்சை பெற வேண்டிய அவசியம்கூட இல்லாமல் குணமடைகின்றனர் என தென்னாபிரிக்காவின் சிரேஷ்ட மருத்துவர் உன்பென் பிள்ளை தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்காவில் கடந்த மாதம் ஒமைக்ரோன் திரிபு வைரஸ் பரவல் கண்டறியப்பட்டது. இது ஏனைய அனைத்து கொரோனா திரிபு வைரஸ்களைவிட ஆபத்தானதுடன் - வேகமாகப் பரவக் கூடியது என எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டன. அத்துடன், இதனை கவை லைக்குரிய திரிபாக உலக சுகாதார அமைப்பு வகைப் படுத்தியது.

இதனையடுத்து பல நாடுகள் ஆபிரிக்க நாடுகளுக்கான பயணத் தடைகளை மீண்டும் விதித்தன.

இந்நிலையில், ஒமைக்ரோன் வைரஸ் குறித்து தேவையின்றி அச்சம் கொள்ள வேண்டாம். அது அத்தனை ஆபத்தானதில்லை என தென்னாபிரிக்காவின் சிரேஷ்ட மருத்துவர் உன்பென் பிள்ளை கூறியுள்ளார்.

ஒமைக்ரோன் தொற்றுக்குள்ளாகிப் பாதிக்கப்பட்ட பலர் மருத்துவமனையில் அனுமதிக்கப்படும் தேவையின்றி 10 முதல் 14 நாட்களில் குணமடைந்தனர் என்றும் அவர் கூறினார்.




## மேற்கிந்தியத் தீவுகளின் 3 வீரர்களுக்கு தொற்று!

ஜமைக்கா, டிசெ. 13

மேற்கிந்தியத்தீவுகள் கிரிக்கெட் குழுவில் வீரர்கள் மூவருக்கு கோவிட்-19 தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இதனால் கராச்சியில் நடைபெறும் ஆறு சர்வதேசப் போட்டிகளை அவர்கள் தவற விடுவார்கள்.

அணியின் சகலதுறை ஆட்டக்காரர்களான ரோஸ்டன் சேஸ், கைல் மேயர்ஸ் மற்றும் இடது கை வேகப் பந்து வீச்சாளர் ஷெல்டன் கொட்ரெல் ஆகியோரே கொரோனா தொற்றுக்கு இலக்காகியுள்ளனர் என்று மேற்கிந்தியத்தீவுகள் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

இந்த சுற்றுப் பயணத்தில் இணையாத மற்றொரு வீரருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந் நிலையில் பாகிஸ்தானுக்கான சுற்றுப் பயணம் குறித்து கருத்து தெரிவித்துள்ள மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் அணியின் தலைமை நிர்வாக அதிகாரி ஜானி கிரேவ் , பின்னடைவு இருந்தாலும் தொடருக்காக மீதமுள்ள வீரர்கள் தயாராகி வருகின்றனர் - என்றார். (ஐ)

### எல். பி. எல். இருபது - 20 தொடர்

# இறுதிப்பந்துவரை விறுவிறுப்பு; தம்புள்ளை அணி 'த்ரில்' வெற்றி!

கொழும்பு, டிசெ. 13

இறுதிப் பந்துவரை விறுவிறுப்பாக நடந்த போட்டியில் கொழும்பு அணியை ஓர் ஓட்டத்தால் வெற்றி கொண்டது தம்புள்ளை அணி.

கொழும்பு ஆர். பிரேமதாஸ மைதானத்தில் நடக்கும் எல். பி. எல். இருபது - 20 இரண்டாவது தொடரில் நேற்று முன்தினம் இரவு நடந்த போட்டியில் தம்புள்ளை ஜியான்ட்ஸ், கொழும்பு ஸ்ரார்ஸ் அணிகள் மோதின.

தினேஷ் சந்திமாலின் அபாரமான துடுப்பாட்டத்தால் கொழும்பு ஸ்டார்ஸ் அணி வெற்றியின் இறுதி விளிம்பு வரை சென்றது. எனினும், அவர்களின் வெற்றிக் கனவை மாற்றியமைத்தது சாமிக கருணாரத்னவின் இறுதி ஓவர்.



நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற, தம்புள்ளை ஜியான்ட்ஸ் அணித் தலைவர் தசூன் சானக முதலில் துடுப்பெடுத்தாடத் தீர் மானித்தார்.

நிரோஷன் டிக்வெல்லா மற்றும் பில் சால்ட் ஆகியோர் முதல் விக்கெட்டுக்கு 48 ஓட்டங்களை சேர்த்னர். டிக்வெல்ல 30 ஓட்டங்களுடனும், பில் சால்ட் 21 ஓட்டங்களுடனும் சீக்குகே பிரசன்னவின் பந்து வீச்சில் ஆட்டமிழந்து வெளியேற, முதல் பவர் பிளேயில் தம்புள்ளை அணி 6 ஓவர்கள் முடிவில் 53 ஓட்டங்களை எடுத்தது.

இவர்களுக்கு அடுத்தபடியாக வந்த சொஹைப் மக்சூத் மாத்திரம் அதிகபடியாக 24 ஓட்டங்களை பெற, அடுத்தடுத்து வந்த ஏனைய வீரர்கள் குறைந்த ஓட்டத்துடன் ஆட்டமிழந்து வெளியேறினர்.

இறுதியாக 20 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்களை இழந்து 138 ஓட்டங்களை பெற்றது தம்புள்ளை அணி.

பந்து வீச்சில் கொழும்பு சார்பில் ரவி ராம்போல், ஜெப்ரி வெண்டரிசி ஆகியோர் தலா 3 விக்கெட்களையும், சீகுகே பிரசன்ன 2 விக்கெட்களையும் வீழ்த்தினர்.

139 என்ற இலக்கை துரத்திய கொழும்பு ஸ்ரார்ஸ் அணிக்கு ஆரம்பம் முதலே அடுத்தடுத்து விக்கெட்கள் சரிய ஆரம்பித்தது. 38 ஓட்டங்களுக்குள் 4 விக்கெட்களை பறிகொடுத்தது தடுமாறியது. ஆரம்ப வீரர்களான குசல் பெரேரா 5 ஓட்டங்களுடனும், டோம் பென்டன் 8 ஓட்டங்களும் ஆட்டமிழக்க, அடுத்தடுத்து வந்த அஷான் பிரியஞ்சன் 3 ஓட்டங்களுடனும், ஷெர்பேன் ரதர்போர்ட் 4 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

பின்னர், 5 ஆவது விக்கெட்டுக்காக அணித் தலைவர் தனஞ்சய டீ சில்வாவும், தினேஷ் சந்திமாலும் இணைந்து நிலைத்து ஆடினர். எனினும், 13 ஆவது ஓவரின் முதலாவது பந்து வீச்சை எதிர்கொண்ட தனஞ்டிய டிசில்வா, பந்தை சிக்ஸருக்கு தூக்க முயன்றார். எனினும் பந்தை எல்லைக் கோட்டுக்கு அருகில் நின்று சாமர்த்தியமாக பிடித்தார் சாமிக கருணாரத்ன.

இதனால் கொழும்பு ஸ்ரார்ஸ் அணியின் 5ஆவது விக்கெட் 70 ஓட்டங்களுக்கு பறிபோனது. ஒரு கட்டத்தில் போட்டியின் வெற்றிக்கு 24 பந்துகளில் 52 ஓட்டங்கள் தேவை என்ற நிலை இருந்தது. இந் நிலையில் சந்திமால் சிக்ஸர், பௌண்ட்ரிகளை விளாச இறுதி ஓவரில் 13 ஓட்டம் வெற்றிக்கு என்ற நிலை ஏற்பட்டது.

இறுதி ஓவரை சாமிக கருணாரத்ன வீசினார். அதை எதிர்கொண்ட சந்திமாலால் 11 ஓட்டங்களையே பெற முடிந்தது. இதனால், இறுதியில் தம்புள்ளை ஓர் ஓட்டத்தால் வெற்றி பெற்றது.

சந்திமால் 40 பந்துகளில் 4 பௌண்ட்ரிகள், 3 சிக்ஸர்களுடன் 65 ஓட்டங்களை குவித்தார். (ஐ)

# காபா மைதானத்தில் வீழ்ந்தது இங்கிலாந்து

## 35 வருட வரலாற்றை தக்கவைத்தது ஆஸி.

பிரிஸ்பேன், டிசெ. 13

பிரிஸ்பேனில் நடந்த ஆஷஷ் டெஸ்ட் தொடரின் முதல் போட்டியில் இங்கிலாந்து அணியை 9 விக்கெட்களால் வீழ்த்தியது ஆஸ்திரேலிய அணி.

அவுஸ்திரேலிய அணியின் சுழற்பந்துவீச்சாளர் நதன் லயன் 400ஆவது டெஸ்ட் விக்கெட்டைக் கைப்பற்றி புதிய மைல் கல்லை எட்டினார்.

5 நாட்கள் நடைபெற வேண்டிய டெஸ்ட் போட்டி 4ஆவது நாளிலேயே முடிவுக்கு வந்தது. ஆட்டநாயகன் விருது டிராவிஸ் ஹெட்டுக்கு வழங்கப்பட்டது.

கடந்த 1986ஆம் ஆண்டுக்குப் பின் காபா மைதானத்தில் அவுஸ்திரேலிய அணிக்கு எதிராக டெஸ்ட் வெற்றியை இங்கிலாந்து அணி பெறவில்லை எனும் வரலாறு தொடர்கிறது. அதாவது 35 ஆண்டுகளாக காபா மைதானத்தில் அவுஸ்திரேலியாவை இங்கிலாந்து அணியால் வெல்ல முடியவில்லை.

அதுமட்டுமல்லாமல் கடந்த 10 ஆண்டுகளாக அவுஸ்திரேலிய மண்ணில் டெஸ்ட் வெற்றியை இங்கிலாந்து ருசிக்கவில்லை. கடைசியாக 2010-11ஆம் ஆண்டு இங்கிலாந்து அணி வென்றிருந்தது.

டெஸ்ட் சம்பியன்ஷிப் புள்ளிப் பட்டியலில் ஒரு டெஸ்டில் ஒரு வெற்றி என 100 சதவீதத்துடன் 12 புள்ளிகளுடன் 2ஆவது இடத்தில் அவுஸ்திரேலிய அணி இருக்கிறது.

223 ஓட்டங்கள் வரை 2 விக்கெட்களை மட்டுமே இழந்து ஆட்டத்தை சுவாரசியமாக வைத்திருந்த இங்கிலாந்து அணி அடுத்த 74 ஓட்டங்களுக்குள் மீதமிருந்த 8 விக்கெட்களையும் இழந்து வெற்றியைத் தாரை வார்த்தது. ஒருவேளை சனிக்கிழமை 4வது நாள் முழுவதும் இங்கிலாந்து வீரர்கள் துடுப்பெடுத்தாடி 200 ஓட்டங்கள் என்று இலக்கு நிர்ணயித்திருந்தால் கடைசி நாள் ஆட்டம் உச்சகட்டப் பரபரப்பை எட்டியிருக்கும். ஆனால், எதற்கும் வழியில்லாமல் 4ஆவது நாளிலேயே போட்டி முடிந்தது.

இங்கிலாந்து அணி 2ஆவது இனிங்ஸில் 297 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்ததால் அவுஸ்திரேலிய அணிக்கு 20 ஓட்டங்கள் மட்டுமே இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. ஒரு விக்கெட்டை மட்டும் இழந்த அவுஸ்திரேலிய அணி எளிதாக இலக்கை அடைந்து 9 விக்கெட் வித்தியாசத்தில் வென்றது. இதன் மூலம் 5 போட்டிகள் கொண்ட ஆஷஷ் டெஸ்ட் தொடரில் 1-0 என்ற கணக்கில் அவுஸ்திரேலிய அணி முன்னிலையில் இருக்கிறது.

இங்கிலாந்து அணி முதல் இனிங்ஸில் கம்மின்ஸின் பந்து வீச்சைச் சமாளிக்க முடியாமல் 147 ஓட்டங்களில் ஆட்டமிழந்தது. அவுஸ்திரேலிய அணி 2ஆவது இங்ஸில் டிராவிஸ் ஹெட்டின் (152) சதம், வோர்ணர் (94), லபுஷன் (74) ஆகியோரின் ஆட்டத்தால் 425 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்து 278 ஓட்டங்கள் முன்னிலை பெற்றது.

இதையடுத்து, 2ஆவது இனிங்ஸை ஆடத் தொடங்கிய இங்கிலாந்து அணி விரைவாக முதல் இரு விக்கெட்களை இழந்தது. அணித்தலைவர் ஜோ ரூட் (86), டேவிட் மலன் (80) ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் போராடினரை. 3ஆவது நாள் ஆட்டம் முடிவில் இங்கிலாந்து அணி 2 விக்கெட் இழப்புக்கு 220 ஓட்டங்கள் சேர்த்திருந்தது. 58 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் இங்கிலாந்து அணி இருந்தது.

ஜோ ரூட் (86), டேவிட் மலன் (80) ஓட்டங்களுடன் நான்காம் நாள் ஆட்டத்தைத் தொடர்ந்தனர். டேவிட் மலன் 83 ஓட்டங்களுடன் லயனின் பந்தில் ஆட்டமிழந்தார்.

இருவரும் 3ஆவது விக்கெட்டுக்கு 162 ஓட்டங்களை சேர்த்துப் பிரிந்தனர். மலன் விக்கெட்டை வீழ்த்தியபோது டெஸ்ட் அரங்கில் தனது 400 ஆவது விக்கெட்டை லயன் எடுத்தார். சர்வதேச அளவில் 400 விக்கெட்டுகளை எட்டிய, 17ஆவது சுழற்பந்துவீச்சாளர் என்ற பெருமையை லயன் பெற்றார்.

தொடர்ந்து, ரூட் 89 ஓட்டங்களுடன் கேமரூன் கிரீன் பந்துவீச்சில் விக்கெட்டை இழந்தார். இருவரும் இங்கிலாந்து அணிக்கு நம்பிக்கையளிக்கும் வகையில் துடுப்பெடுத்தாடியிருந்தனர். இருவரும் ஆட்டமிழந்ததுதான் அவுஸ்திரேலிய அணிக்குத் திருப்புமுனையாக அமைந்தது.

இதன்பின் களமிறங்கிய நடுவரிசை துடுப்பாட்ட வீரர்கள், கீழ்வரிசை வீரர்கள் யாரும் நிலைக்கவில்லை.

இங்கிலாந்து அணியில் 9ஆவது வீரர் வரை நன்கு துடுப்பாட்டம் செய்யக் கூடியவராக இருந்தபோதிலும் நதன் லயனின் சுழற்பந்துவீச்சைச் சமாளிக்க முடியாமல் ஆட்டமிழந்தனர்.

இங்கிலாந்து அணி 2ஆவது இனிங்ஸில் 297 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்து 20 ஓட்டங்கள் இலக்காக அவுஸ்திரேலிய அணிக்கு நிர்ணயித்தது. அவுஸ்திரேலிய அணித் தரப்பில் லயன் 4 விக்கெட்களையும், கேமரூன் க்ரீன், கம்மின்ஸ் தலா 2 விக்கெட்களையும் வீழ்த்தினர்.

20 ஓட்டங்கள் சேர்த்தால் வெற்றி எனும் இலக்குடன் அவுஸ் திரேலிய அணி களமிறங்கியது. அலெக்ஸ் கேரே 9 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். ஹரிஸ் 9 ஓட்டங்களுடனும் லபுஷன் ஓட்டம் எதுவும் சேர்க்காமல் இருந்து அணியை 5.1 ஓவர்களில் வெற்றிக்கு அழைத்துச் சென்றனர்.

அடுத்த டெஸ்ட் போட்டி அடிலெய்ட் மைதானத்தில் வரும் வியாழக்கிழமை பகல் - இரவு டெஸ்ட் போட்டியாக நடக்க உள்ளது.

# மக்களில் மூன்றில் ஒரு பங்கு ஆதரவுகூட அரசுக்கு இல்லை

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 13

**அரசுக்கு மக்கள் அபிப்பிராயத்தில் மூன்றில் ஒரு பங்கேனும் ஆதரவு இல்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**



அவிசாவளையில் நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"அரசு மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் வரவு - செலவுத் திட்டத்தை நிறைவேற்றியுள்ள போதிலும், நாடாளுமன்றத்துக்கு வெளியே அவ்வாறான ஆதரவு இல்லை.

பாராளுமன்றத்துக்கு வெளியேயும் மூன்றில் இரண்டு இருக்கின்றது என்பதை நிரூபித்துக் காட்டுமாறு எதிர்க்கட்சி சவால் விடுத்துள்ளது.

நாட்டு வளங்களைப் பாதுகாக்க வந்த அரசு அமைச்சரவைக்கும் தெரிவிக்காமல் அனைத்து வளங்களையும் விற்பனை செய்கின்றது.

அரசு விவசாய சமூகத்தை சட்டியில் இருந்து அடுப்புக்குள் தள்ளிவிட்டுள்ளது" - என்றார். (இ)



# கொட்டகலையில் நேற்று எரிவாயு அடுப்பு வெடிப்பு

கொட்டகலை, டிசெ. 13

நுவரெலியா மாவட்டம், கொட்டகலைப் பகுதியிலுள்ள வீடொன்றில் நேற்று அதிகாலை எரிவாயு வெடிப்புச் சம்பவம் பதிவாகியுள்ளது எனத் திம்புள்ள பத்தனைப் பொலிஸார் தெரிவித்தனர்.

கொட்டகலை, டிரேட்டன் கே.ஓ.பிரிவில், பழைய வீடமைப்புத் திட்டத்தில் உள்ள ஆசிரியை ஒருவரின் வீட்டிலேயே இந்த வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஆசிரியை தண்ணீர் சுட வைப்பதற்காக எரிவாயு அடுப்பை மூட்டியபோதே இந்த வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அடுப்பைப் பற்ற வைத்துள்ள ஆசிரியை, தண்ணீர் கேத்தலை அடுப்பில் வைத்துவிட்டுச் சென்றுள்ளார். இதன்போதே அடுப்பு வெடித்துச் சிதறியுள்ளது.

இந்தச் சம்பவத்தில் எவருக்கும் உயிர்ச்சேதங்கள் ஏற்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வெடித்துச் சிதறிய எரிவாயு அடுப்பின் பகுதிகளையும் எரிவாயு சிலிண்டரையும் பகுப்பாய்வுத் திணைக்களத்துக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (இ)

# 'பட்ஜெட்' விவாதத்தில் சம்பந்தன் ஒருநாள்கூட உரையாற்றவில்லை



கொழும்பு, டிசெ. 13

2022 ஆம் நிதியாண்டுக்கான வரவு - செலவுத்திட்ட விவாதத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் இம்முறை ஒருநாள்கூட உரையாற்றவில்லை.

வழமையாக வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் மற்றும் மூன்றாம் வாசிப்பு மீதான விவாதங்களின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் எம்.பி. கட்டாயம் உரையாற்றுவார்.

வெளிவிவகாரம் மற்றும் பாதுகாப்பு அமைச்சுகளுக்கான ஒதுக்கீடு தொடர்பான குழுநிலை விவாதத்தில் சம்பந்தன் உரையாற்றி வந்ததுடன், கூட்டமைப்புக்கு ஒதுக்கப்படும் முழு நேரத்தையும் சம்பந்தன் எடுத்துக்கொள்வார். விரிவான விளக்கத்துடன் அவரின் உரைகள் இடம்பெறும்.

எனினும், உடல்நலக்குறைவால் இம்முறை அவர் உரையாற்றவில்லை. வரவு - செலவுத்திட்டம் மீதான இறுதி வாக்கெடுப்பன்று சபைக்கு வருகை தந்திருந்த அவர் எதிராக வாக்களித்தார். (இ)



# பாரவூர்தியுடன் மோதி இளைஞர் உயிரிழப்பு

கொழும்பு, டிசெ. 13

இரு இளைஞர்கள் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று கொள்கலன் பாரவூர்தியுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

வத்தளை, மாபோல பிரதேசத்தில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற இளைஞர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

அவருடன் பயணித்த மற்றைய இளைஞர் பலத்த காயங்களுடன் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (இ)

# கைவிலங்கைப் பயன்படுத்தி கைவரிசை காட்டியவர் கைது

கொழும்பு, டிசெ. 13

சிறையிலிருந்து வெளியே வரும்போது திருடிக்கொண்டு வந்த கைவிலங்கைப் பயன்படுத்தி பொலிஸார் எனத் தெரிவித்து கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்ட நபர் ஒருவர், கிருலப்பனை பிரதேசத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர் 34 வயதுடைய ஓட்டோ சாரதி என்றும், இவர் போதைப் பொருளுக்கு அடிமையானவர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

பம்பலப்பிட்டி - சென்லாரன்ஸ் வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார் ஒன்றுக்குள் இருந்த நபரைப் பயமுறுத்தி, கைவிலங்கிட்டு அவரிடமிருந்து தங்க நகைகள் மற்றும் பணத்தைக் கொள்ளையிட்ட சந்தேகநபர், கிருலப்பனை - பூர்வாராம பிரதேசத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதன்போது அவரிடம் 5 ஆயிரத்து 900 மில்லிகிராம் ஹெரோய்ன் போதைப்பொருளும் கைப்பற்றப்பட்டுள்ளது.

ஹெரோய்ன் விற்பனை தொடர்பில் சந்தேகநபர், விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்து விடுதலை செய்யப்பட்ட சந்தர்ப்பத்தில் அவர் அங்கிருந்து கைவிலங்கைத் திருடிக்கொண்டு வந்துள்ளமை ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சந்தேகநபர் தொடர்பில் பம்பலப்பிட்டிப் பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய, சி.சி.ரி.வி. காட்சிகளைப் பயன்படுத்தி முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளுக்கமையவே அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். மேலும், அவரிடமிருந்து ஒரு இலட்சத்து 10 ஆயிரம் ரூபா பணமும், 40 இலட்சம் ரூபா பெறுமதியான கார், கத்தி, கைவிலங்கு மற்றும் மோட்டார் சைக்கிள் என்பனவும் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். (இ)



# நாட்டில் அரிசிக்கு தட்டுப்பாடு வராது

## விவசாய அமைச்சர் நம்பிக்கை

கொழும்பு, டிசெ. 13

"நாட்டில் அரிசிக்கு எவ்வித தட்டுப்பாடும் ஏற்படாது."

- இவ்வாறு விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

இரசாயன உரத்துக்கான தடையையடுத்து நாட்டில் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். வயல் நிலங்கள் அழியும் நிலை ஏற்பட்டது.

இந்நிலையில், 2022ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்துக்குப் பின்னர் நாட்டில் அரசிக்குத் தட்டுப்பாடு ஏற்படும் எனப் பல தரப்பினரும் சுட்டிக்காட்டினர்.

இதற்குப் பதிலளிக்கையிலேயே விவசாயத்துறை அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

10 மாதங்களுக்குத் தேவையான அரிசி கையிருப்பில் இருக்கின்றது எனவும், பெரும்போகத்தின்போது தேவையான அறுவடை கிடைக்கும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டார். (இ)

# மசாஜ் நிலையங்கள் முற்றுகை; 8 பெண்கள் உட்பட 9 பேர் கைது!

கொழும்பு, டிசெ. 13

கம்பஹா மாவட்டம், நீர்கொழும்பு மற்றும் சீதுவை ஆகிய பொலிஸ் பிரிவுகளில் அனுமதிப்பத்திரமின்றி நடத்திச் செல்லப்பட்ட இரு ஆயுர்வேத மசாஜ் நிலையங்கள் முற்றுகையிடப்பட்டுள்ளதுடன் 9 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கம்பஹா, நீர்கொழும்பு பொலிஸ் பிரிவு, கட்டுவ பிரதேசத்தில் அனுமதிப்பத்திரமின்றி நடத்திச் செல்லப்பட்ட ஆயுர்வேத மசாஜ் நிலையம் சுற்றிவளைக்கப்பட்டுள்ளது.

இதன்போது குறித்த நிலையத்தை நடத்திச் செல்வதற்கு உடந்தையாக இருந்த 5 பெண்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சிலாபம், தலாவ, நேகம்மன, பங்கதெனிய மற்றும் கதிர்காமம் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 31, 32, 33, 35 மற்றும் 37 வயதுடைய ஐவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, கம்பஹா, சீதுவை பொலிஸ் பிரிவில் அனுமதிப்பத்திரமின்றி ஆயுர்வேத மசாஜ் நிலையம் என்ற போர்வையில் நடத்திச் செல்லப் பட்ட மற்றுமொரு மசாஜ் நிலையம் முற்றுகையிடப்பட் டுள்ளது.

இதன்போது குறித்த நிலையத்தை நடத்திச் சென்ற நபரும் அதற்கு உடந்தையாக இருந்த மூன்று பெண்களும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

களனிய, வீரவில, லுணுவில மற்றும் தளுப்பனே ஆகிய பிரதேசங்களை ச் சேர்ந்த நால்வரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர். (இ)

ஈழநாடு
Eelanadu

# வடமேல் ஆளுநர் நியமனத்துக்கு ஆளும் தரப்பு எம்.பியும் எதிர்ப்பு

## குணசேகரவே பொருத்தமானவர் என்கிறார் டிலான்



**கொழும்பு, டிசெ. 13**

**"வடமேல் மாகாண சபைக்கான ஆளுநராக வசந்த கரன்னகொட நியமிக்கப்பட்டுள்ளமை தவறாகும்."**

**- இவ்வாறு ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினரான டிலான் பெரேரா தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

"வடமேல் மாகாண ஆளுநராக செயல்பட்ட ராஜா கொலுரே உயிரிழந்தார். இதனால் ஏற்பட்ட வெற்றிடத்துக்கு முன்னாள் அமைச்சர் டியூ. குணசேகர நியமிக்கப்பட்டிருக்க வேண்டும். அவரே பொருத்தமானவர்.

எனவே, வசந்த கரன்னகொடவின் நியமனம் ஏற்புடையது அல்ல. இவ்வாறுதான் சிற்சில இடங்களில் அரசு தவறிழைக்கின்றது. அந்தத் தவறுகளைத் திருத்திக் கொண்டு அரசு பயணிக்க வேண்டும்" - என்றார். (இ)

# இலவச கல்வியையும் அழிக்க போகின்றீர்களா?

## ஜனாதிபதியிடம் ஆசிரியர் சங்கம் கேள்வி



*கொழும்பு டிசெ. 13*

"விவேகமற்ற கொள்கைத் தீர்மானங்களால் நாட்டின் விவசாயத்தை அழித்ததைப் போன்று நாட்டின் கல்வி யையும் ஜனாதிபதி அழிக்கப் போகின்றாரா?"

- இவ்வாறு இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் கேள்வி எழுப்பினார். இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"அரசு காலத்துக்குக் காலம் எடுக்கும் தீர்மானங் களால் நாட்டின் பல துறைகளிலும் பாரிய பிரச்னைகள் ஏற்பட்டுள்ளன.

அரச பல்கலைக்கழகங்கள் தொடர்பில் அரசின் கருத் துக்கள் தற்போது கேள்விக்குள்ளாக்கப் பட்டுள்ளன.

கொத்தலாவல பல்கலைக்கழக சட்டமானது கல்வி யைத் தனியார் மயமாக்கும் சட்டமாகும்.

உயர்கல்வியை அந்நிய செலாவணி ஈட்டும் முறையாக மாற்றுவது தொடர்பாக ஜனாதிபதிக்கு ஆலோ சனை வழங்குவது யார்?

விவேகமற்ற கொள்கைத் தீர்மானங்களால் நாட்டின் விவசாயத்தை அழித்ததைப் போன்று நாட்டின் கல்வி யையும் ஜனாதிபதி அழிக்கப் போகின்றாரா என்ற நியாயமான சந்தேகம் நிலவுகின்றது.

மூன்று அமைச்சர்கள் இருந்தபோதிலும் கல்வி முறைமை பிரச்னைகளால் நிரம்பி வழிகின்றன" - என்றார்.

இதேவேளை, பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், டலஸ் அழகப்பெரும மற்றும் தினேஷ் குணவர்த்தன ஆகியோர் கல்வியைப் புறக்கணிப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ளனர் என்று இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் செய லாளரான மஹிந்த ஜய சிங்க தெரிவித்துள்ளார். (இ)

# 50 அடி பள்ளத்தில் பாய்ந்தது ஓட்டோ

## இருவர் படுகாயம்

*நுவரெலியா, டிசெ. 13*

நுவரெலியா, நோட்டன் - பம்பரகலை தோட்டத்தில் நேற்று அதிகாலை உள்ளக வீதியோரத்தில் 50 அடி பள்ளத்தில் பாய்ந்து ஓட்டோ ஒன்று விபத்துக்குள்ளானதில் இருவர் படுகாயமடைந்த நிலையில் டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.



சாரதி உட்பட நால்வர் குறித்த ஓட்டோவில் பயணித்துள்ள நிலையில் சாரதியும் மற்றுமொருவருமே படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்த விபத்து தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

## மரண அறிவித்தல்



தோற்றம்
09
-
01
-
1967

மறைவு
10
-
12
-
2021

**திருமதி**
**புவிராஜசிங்கம் யோகசுகிர்தமலர்**
**(சுகி)**

யாழ். கொடிகாமம் அல்லாரை வடக்கைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸ் Epinay-sur-Seine ஐ வசிப்பிடமாகவும் கொண்ட புவிராஜசிங்கம் யோகசுகிர்தமலர் அவர்கள் 10.12.2021 வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற சிதம்பரநாதன் - லீலாவதி தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற சடாச்சரம், - நவமணி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற புவிராஜசிங்கம் அவர்களின் ஆருயிர் மனைவியும், மர்திகா, கெவின், காலஞ்சென்ற ஸ்ரீபன், ஜெனிக், தர்மிகா ஆகியோரின் பாசமிகு தாயாரும், பிரபாகரன்(பிரபா) அவர்களின் அன்பு மாமியாரும், பிரணவன்(Rana) அவர்களின் பாசமிகு அம்மம்மாவும், இந்திரன்(பிரான்ஸ்), சந்திரா(லண்டன்), ராசாத்தி (பிரான்ஸ்), சிறி(பிரான்ஸ்), ரவி(பிரான்ஸ்), சுதன் (பிரான்ஸ்), லதன்(பிரான்ஸ்), ரஞ்சன்(பிரான்ஸ்), கீதா (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், நேசன் (ஜேர்மனி), தாசன்(இலங்கை), வசந்தி (இலங்கை), லதா(பிரான்ஸ்), பாமினி(பிரான்ஸ்), குகேந்தி (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விபரம் பின் னர் அறியத்தரப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தொடர்புகளுக்கு:*
**மர்திகா (மகள்)** : +33698793529
**பிரபா (மருமகன்)** : +33605864372
**கெவின் (மகன்)** : +33659622357
**ஜெனிக் (மகன்)** : +33659196218
**இந்திரன் (சகோதரன்)** : +33148666940
**சிறி (சகோதரன்)** : +33652243776
**ரவி (சகோதரன்)** : +33652507762
**சுதன் (சகோதரன்)** : +94760341213
**லதன் (சகோதரன்)** : +33652776080
**ரஞ்சன் (சகோதரன்)** : +33778195718
**நேசன் (மைத்துனர்)** : +491742384986
**குகேந்தி (மைத்துனர்)** : +447828033031

*தகவல்:*
**குடும்பத்தினர்.**










*இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 13.12.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.*

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய ராசி பலன்
7.05 மணி : உளவியல் கருத்து - உளவளத்துணையாளர் நா.நவராஜ்
7.15 மணி : கதைவழி அறமொழி வழங்குபவர் : பண்டிதர் திருநாவுக்கரசு
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்



7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : தொடர் நாடகம்-சிங்கப் பெண்ணே
11.00 மணி : கொழும்பு - 16 - மறு ஒளிபரப்பு
11.30 மணி : மனிதனின் மறுபக்கம்
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க - நேரலை நகைச்சுவை நிகழ்ச்சி

**பகல்**
1.00 மணி : அறிந்தும் அறியாமலும் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ் - கும்கி, ஈட்டி ஆகிய திரைப்படங்களின் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்- சிறுவர்களை மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : ரெயிலர் ரைம்



06.30 மணி : நலந்தானா
7.00 மணி : சொற்சமர் - பாடசாலை மாணவர்களுக்கான விவாத நிகழ்ச்சி
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சாட்சியம்
09.30 மணி: ஹலோ கோடம்பாக்கம்




10.00 மணி : நேருக்கு நேர்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## ரிவி

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி :கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : இந்த வார புனிதர் (யாழ்ப்பாணம்)
8.00 மணி : ஜெபமாலை
09.30 மணி : ஞானவழி (மறு ஒளிபரப்பு சனி)
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறுஒளிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : விவிலியம் அறிவோம் (திருகோணமலை) ஞாயிறு

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்) மறு ஒளிபரப்பு
04.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு) மறுஒளிபரப்பு
05.00 மணி: திருப்பலி (திருகோணமலை) மறுஒளிபரப்பு
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறுஒளிபரப்பு)
07.00 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் மறு ஒளிபரப்பு
7.30 மணி : இந்த வார புனிதர் (யாழ்ப்பாணம்) மறு ஒளிபரப்பு

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு